# மாதநிலா

உங்கள் குடும்ப நிலா

MATHANILA மாதநிலா

50/-

நிலா - 18 Regd No: 1419 01 ஏப்ரல் 2014


எமது பெறுமதிமிக்க வாசகர்களே!
அனைவருக்கும் உளம்கனிந்த சித்திரை
புத்தாண்டு இனிய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!



- பூமிக்குள் ஒரு பயணம்
- ஓய்வு அறியாத சிறுநீரகம்
- பாலியல் நெறிபிறழ்வும் இன்றைய சமூகத்தின் பொறுப்பும்
- மீண்டும் முதலிடத்தை தன்வசப்படுத்திய பில்கேட்ஸ்
- வயிற்றில் வளர்வது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்பதை அறிய...



இம்மாத குட்டீஸ்

உள்ளே இருக்கும் கூப்பனை நிரப்பி
எமக்கு அனுப்புவதன் மூலம்

**பெறுமதிமிக்க 3 பரிசில்கள்**
**உங்களுக்காக காத்திருக்கின்றன**

உடன் வாங்குங்கள்....!
படியுங்கள்....!
பரிசில்களை வெல்லுங்கள்...!

அறிவு! ஆனந்தம்!! ஆச்சரியம்!!!

# SINGER Plus

10000/- மாற்றுமுறை விலைக்கழிவு அல்லது 12 மாதங்களுக்கு வட்டியில்லா தவணை முறை

12 மாதங்களுக்கு வட்டி இல்லா கொடுப்பனவு

15% விலைக்கழிவு அல்லது 12 மாதங்களுக்கு வட்டி இல்லா தவணை முறை

12 மாதங்களுக்கு வட்டி இல்லா தவணைமுறையுடன் DVD Player அல்லது TV Stand இலவசம்

SINGER (SRI LANKA) PLC, Singer Show Room, Vavuniya.
024 2224421, vavuniya@singersl.com.

# மணமகன் மணமகள் தேவை

வெளிநாட்டு மணமகன், மணமகள், உள்ளூர் மணமகன், மணமகள், தேவையானவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்



## தர்சினி திருமண சேவை

இல: 04/B, குட்செட் வீதி, வவுனியா.
தொ.பே.இல: 077 8866806 / 0772940146

மாதநிலா
MATHANILA மாதநிலா உங்கள் குடும்ப நிலா!

இதழாசிரியர்
திருமதி.அனிதா விஜய்

நிர்வாக இயக்குனர்
திரு.எஸ்.விஜய்

கணினி வடிவமைப்பு,
அச்சுப் பதிப்பு
விஜய் அச்சுப் பதிப்பகம்
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

வெளியீடு
பதிப்புநிலம் வெளியீட்டகம்
172, மில் வீதி, வவுனியா.
024 222 5799 / 077 900 9491

அனைத்து ஆக்கங்களையும் கருத்துக்களையும் அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர்,
"மாதநிலா"
172B, மில் வீதி, வவுனியா.

எமது சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ஆக்கங்களுக்கு அவரவரே பொறுப்பாளிகளாவர்

விளம்பரங்களில் உள்ள விடயங்களுக்கு விளம்பரதாரர்களே உரித்தாவார்கள்

## இம்மாத வேண்டுகோள்!




### பாதுகாப்பில்லா புகையிரதக்கடவையை கடக்கும்போது அவதானமாயிருங்கள்

எமது பெருமதிமிக்க வாசகர்களே! நண்பர்களே! அவதானமாயிருங்கள்! 08.03.2014 அன்று வவுனியா விளக்குவைத்தகுளம் பகுதியில் ரயில் வந்து கொண்டிருந்த நேரம் 32 வயதுடைய தந்தையும் 3 வயதே நிரம்பிய அவரது மகனும் மோட்டார் சைக்கிளில் பாதுகாப்பற்ற புகையிரத கடவையினைக் கடக்க முற்பட்ட வேளையிலே இந்தவிபத்து நடந்தது.



# பூமிக்குள் ஒரு பயணம்



நீங்கள் பேலம் குகைகளுக்குப் போயிருக்கிறீர்களா? (Belum caves) அது, நமது அண்டை மாநிலமான ஆந்திராவின் கர்னூல் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்தியக் குகைகளிலேயே இது இரண்டாவது நீண்ட பெரிய குகையாகும்.

இந்தக் குகைக்குப் போனால், நீங்களாகத் தனித்துத் திரிய ஆரம்பித்து விடாதீர்கள். ஏனென்றால், நீங்கள் காணாமல் போகக் கூடும். தொண்டை கிழிய நீங்கள் கத்தினாலும், உங்கள் உதவிக்கு வர யாரும் அருகே இருக்கமாட்டார்கள்.

இந்தக் குகைகள், விவசாய நிலங்களுக்குக் கீழே உள்ளன. 3.5 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்தக் குகையில், வெறும் 2 கிலோ மீட்டர் தூரம்தான் பொதுமக்களுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

வழிகாட்டியின் உதவியோடுதான் உங்கள் பயணத்தைத் தொடரமுடியும். உண்மையிலேயே அது உங்கள் மூச்சை நிறுத்தக்கூடிய இடம்தான் உள்ளே அவ்வளவு இறுக்கமாக இருக்கிறது. நல்வாய்ப்பாக, ஆந்திரப்பிரதேச சுற்றுலாக் கழகம், காற்று போய்வர, ஆங்காங்கே சில அமைப்புகளை நிறுவியுள்ளது. அதனால் அது ஓரளவுக்குச் சிரமமில்லாமல் இருக்கிறது.

குகைக்குள் நுழைவதற்கு ஒரு சிறு ஓட்டை வழியாக நீங்கள் இறங்க வேண்டும். அந்தக் குகை, ஒன்றுக்கொன்று தொடர்புடைய அறைகளாக இருப்பதைக் காணலாம்.

நிலத்துக்கடியில் உள்ள ஆறு, மெதுவான சுண்ணாம்புக் கற்களை ஊடுருவி அறுத்துக் கொண்டு போனதால், இந்தக் குகை உண்டாகியிருக்கிறது. குகையின் சில இடங்களில் பாறையிலிருந்து நீர்வடிவதைப் பார்க்கலாம். இந்தக் குகையில் நீங்கள் அதிகம் நடக்க வேண்டியிருக்கும். சில இடங்களில் தவழ்ந்தும் போக நேரலாம். ஆகவே, விரைவில் களைப்படைந்து விடுவீர்கள். அதற்குத்தக்க ஆடைகளும், காலணிகளும் நீங்கள் கொண்டு செல்ல வேண்டும்.

பேலம் குகைகள்

இந்தக் குகைக்கு, தரை மட்டத்திலிருந்து மூன்று இடங்களிலிருந்து பாதைகள் உள்ளன. ஆனால், அவற்றில் இரண்டை மூடிவிட்டார்கள். பல இடங்களில் நீங்கள் தவழ்ந்து, நகர்ந்து செல்ல வேண்டியிருக்கிறது.

குகையின் ஆழமான பகுதி, தரைமட்டத்திலிருந்து 150 அடிக்குக் கீழே இருக்கிறது. அதை பாதாள கங்கா என்று அழைக்கின்றனர். அங்கே, ஒரு வற்றாத நீரூற்று காணப்படுகிறது. மற்றொரு அறைக்கு கோடி வீங்காயலு என்று பெயரிட்டுள்ளனர். அங்கு, கொம்பு போன்ற வடிவத்தில் சுண்ணாம்புக்கல் அமைப்பு இருக்கிறது. வேறொரு அறையை சப்தஸ்வரலகுகர் என்று அழைக்கின்றனர். அதாவது, ஏழு சுவரங்கள்





(ராக இயல்புகள்) கொண்ட குகை.

அங்கு அமைந்துள்ள சுண்ணாம்புப் படிவங்களிலிருந்து உலோக ஒலிகள் கேட்கின்றன. திரும்பி வரும்போது, ஊர்ந்து செல்லும் ஒரு வழியில் சென்றால் இருட்டான ஒரு பகுதி வருகிறது. அது மிகவும் அச்சமூட்டக்கூடியதாகவும், வியப்பூட்டக்கூடியதாகவும் உள்ளது.

வீர சாகசம் செய்த ஓர் உணர்வை, அந்த இடத்திற்குச் சென்று வருவதன் மூலம் நாம் பெற முடியும். அந்தக் குகையில், மக்கள் சென்றறியாத சில இடங்களும், குகை வெடிப்புகளும் உள்ளன. இந்தக் குகைகளுக்கு முடிவே இல்லாதது போலத் தொடராக உள்ளன.

1,000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே உள்ளூர்வாசிகளுக்கு இந்தக் குகை பற்றித் தெரியும் என்று வழிகாட்டி சொன்னார். இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 4,500 ஆண்டுகளுக்கு முன்பாகவே, மனிதர்கள் அங்கு வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது.

1884இல் தான் முதன்முதலாக, ஆங்கிலேய நிலவியல் வல்லுனரும், தொல்பொருள்இயல் வல்லுனருமான ராபர்ட் புரூஸ் என்பவர்தான் இந்தக் குகைகளைப் பற்றி முதன்முதலில் பதிவு செய்துள்ளார்.

ஆனால், சில சுற்றுப்பயண ஆர்வலர்கள், பூமிக்கடியில் உள்ள இந்தப் பல நூற்றாண்டுகளுக்கு மேலான அமைப்பினை நினைவிருத்திக் கொள்வதற்காக சுண்ணாம்புப் படிமங்களைச் சுரண்டிச் செல்வதுதான் வருத்தமளிக்கிறது என்கிறார் ஓர் இயற்கை ஆர்வலர்.


"மாதநிலா" சஞ்சிகையில்
க.பொ.த.சாதாரண தர பரீட்சையில்
6 பாடச் சித்தியுடன்

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களிலிருந்தும் விற்பனைப் பிரதிநிதிகள் எதிர்பார்க்கப்படுகின்றனர்

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

தொடர்புகளுக்கு:
077 0498177


# உலகப் புகழ் பெற்றவர்கள் ஜோகன்னஸ் குட்டன்பர்க் [Johannes Gutenberg] 1394 – 1468

ஐரோப்பாவில் எழுத்தறிவின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்களில் முதன்மையாகத் திகழ்ந்தவர்தான் ஜோகன்னஸ் குட்டன்பர்க். பல அரிய கருத்துக் கருவூலங்கள், கையெழுத்துப் பிரதிகள் வாயிலாக மக்களிடம் பரப்பப்பட்ட காலத்தில் இவர் முதன்முதலில் அச்சு இயந்திரம் கண்டுபிடித்து ஓர் எழுச்சியை உருவாக்கினார். இவரது கண்டுபிடிப்பால் பல அச்சகங்கள் உருவாயின.

அதன் வாயிலாக பல அரிய நூல்கள் மிக விரைவில் வெளிவந்து மக்களிடையே அறிவுச் செல்வம் பரவ துணை நின்றது. எட்டாக்கனியாக இருந்த அறிவுலகப் படைப்புகள் அனைவருக்கும் எளிதாகவும், விரைவாகவும் கிடைக்க இவரது கண்டுபிடிப்பு அடித்தளம் அமைத்தது. பிற்காலத்தில் இதுவே பெரும் அறிவு மறுமலர்ச்சிக்கு வித்திட்டது.



## குட்டன்பர்க் இளமைக்காலம்


1394 ஆம் ஆண்டு ஜெர்மன் நாட்டின் ரைன் நதிக்கரையில் அமைந்திருந்த மெய்ன்ஸ் (Mainz) என்னும் ஊரில் இவர் பிறந்தார். இவரது தந்தை ஃபெரில் ஜென்ஸ்பிலிஸ் (Friele Gensfleisch) ஒரு பொற்கொல்லர். இவரது தாயார் எல்சி வில்ரிச் (Else Wilrich) வணிகர் குலப் பெண்மணி. இவர்கள் குடும்பம் செல்வச் செழிப்புடன் – சிறந்து விளங்கியதால் இளம் வயதிலேயே இவர் இலத்தீன் இலக்கணம் பயிலும் வாய்ப்பைப் பெற்றார். இந்த வாய்ப்பு இவரது அறிவு வளர்ச்சிக்கும் இலத்தீன் மொழித்திறனைச் செவ்வனே உணர்ந்து கொள்வதற்கும் பெரிதும் துணை நின்றது.

## சோதனைக்காலம்

இவர் வாழ்ந்த மெய்ன்ஸ் (Mainz) நகரில் உள்நாட்டுக் கலவரம் மூண்டது– அதனால் சில குடும்பங்கள்

வெளிமாநிலங்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் சூழல் ஏற்பட்டது. இந்த நிலையில் சிறந்த தொழில் நகரமாகவும் – வாணிப மய்யமாகவும் விளங்கிய ஸ்ட்ராஸ்பர்க் (Strasburg) நகரில் சென்று இவரது குடும்பம் குடியேறியது. இந்நகரில் இவர், வைரங்களுக்குப் பட்டை தீட்டும் தொழில்நுட்பத்தில் பல புதிய முறைகளைக் கையாண்டு தன் வாழ்வை வெற்றிப் பாதையை நோக்கி வழிநடத்தினார்.

அத்துடன் புதியவகையில் தேவவாக்குகளை (Holy Mirror) அச்சுவில்லைகளாக வடிவமைத்து தேவாலயங்களுக்கு வரும் பக்தர்களுக்கு விற்பனை செய்யலானார். விற்பனை சூடுபிடிக்க ஆரம்பிக்கும் கட்டத்தில் அந்நகரில் பிளேக் என்ற கொள்ளை நோய் பரவியது – அங்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை குறைந்தது மீண்டும் இவரது வளமான வாழ்வில் இருள் சூழ்ந்தது – குடும்பம் இதனால் வறுமையில் வாடியது.



புதிய கண்டுபிடிப்பு குட்டன்பர்க் அச்சு இயந்திரத்தின் மாதிரி வடிவம்

இவரது தாயார் 1433 ஆம் ஆண்டு மறைந்தார் அவரது சேமிப்பில் இருந்த கணிசமான தொகை இவருக்கு வந்து சேர்ந்தது. அச்சுத்தொழிலில் புதுமையைப் புகுத்த அத்தொகையை அவர் செலவிட்டார். Holy Mirror என்ற தேவ வாக்குகளை ஒரே சட்டமாக – அச்சாக இவர் வெளியிட்டு வந்த நிலையை மாற்றி அச்சு எழுத்துகளைத் தனித்தனியாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தும் வகையில் வடிவமைத்தார்.

இந்தத் திட்டம், அதாவது அவரது இந்தக் கண்டுபிடிப்புதான் உலகில் இன்று பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் வெளிவருவதற்கும் – அதன் வாயிலாக மனித சமுதாயம் மகத்தான அறிவுத் தேடலைப் பெறுவதற்கும் வழிவகுத்தது. அறிவின் பாதையில் செல்லும் உலகுதான் வலிமையும் – இனிமையும் – பெருமையும் பெற்ற உலகமாகத் திகழ முடியும் என்பதை உணர்ந்த குட்டன்பர்க் அச்சுக் கோர்ப்பதில் புதிய உத்திகளைச் செயல்படுத்த தன்னுடன் ஜோகன் பஸ்ட் (Johann Fust) என்பவரைப் பண முதலீடு செய்யும் பங்குதாரராக இணைத்துக் கொண்டார்.

இந்தப் புதிய முறையைப் பயன்படுத்தி முதன்முதலில் இலத்தீன் மொழியின் அடிப்படை இலக்கணக் குறிப்பு நூல் ஒன்றை அச்சாக்கினார். கையெழுத்துப் பிரதிகளையே படித்து வந்த மக்களிடையே இவரது நூலுக்கு மாபெரும் வரவேற்புக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து தேவாலயத்தில் இருந்த போப் அரசர் கிறித்துவர்களின் வேதமாகிய பைபிள் (Bible) அச்சடிக்கும் வாய்ப்பை முதன்முதலில் இவருக்கு அளித்தார். பக்கத்திற்கு 42 வரிகள் என்ற அடிப்படையில் நூல் அச்சாக்கப்பட்டது. 200 படிகள் மட்டும் அச்சிடப்பட்ட இந்நூல் இருவண்ணங்களில் – வண்ண வேலைப்பாட்டுடன் உருவாக்கப்பட்டு மக்கள் மன்றங்களில் சரியாகப் பதிவு செய்யப்பட்டது.

இன்று உலகில் மிக அதிகமாக வெளியிடப்படுவதும் – மிக அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல மில்லியன் பிரதிகளை அச்சிட்டு உலக நாடுகள் அனைத்திலும் பரப்பப்படுவதுமான இந்த விவிலிய (Bible) நூலை அன்று வெளியிட்ட சாதனையாளர் குட்டன்பர்க் ஆவார். இவர் முதன்முதலில் வெளியிட்ட விவிலிய(Bible) நூல் இன்றும் இலண்டன் மாநகர அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இவ்விதமாகத் தம் மரியாதையை இம்மாமேதைக்குச் செலுத்திய வண்ணம் உள்ளனர்.

**அச்சக உரிமை இழப்பு**

இவரது முயற்சிக்குப் பெருமளவில் ஆதரவும் – இவரது

தொழிலுக்கு அதிக அளவில் வெற்றி வாய்ப்பும் வந்து கொண்டிருந்த நேரத்தில் இவரது பங்குதாரர் பஸ்ட் (Fust) தான் முதலீடாகச் செய்த தொகையைத் திரும்பச் செலுத்துமாறு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்–. இதில் பணபலம் பெற்ற ஜோகன் பஸ்ட் (Johann Fust) சார்பாகத் தீர்ப்புக் கூறப்பட்டது. இதனால் குட்டன்பர்க், தமது தொடர் உழைப்பாலும், தொழில்நுட்பத்தாலும், நுண்மாண்நுழைபுலத்தாலும் ஆய்ந்து ஆய்ந்து கண்டுபிடித்த அச்சு இயந்திரத்தையும், அச்சு எழுத்துகளையும், அச்சகத்தையும் விட்டுவிட்டு வெளியேறும் கட்டாயம் ஏற்பட்டது. இவை அனைத்தும் ஜோகன் பஸ்ட் என்ற பங்குதாரரின் உரிமையாயிற்று.

### இறுதிக் காலம்

தொடர்ந்து பல இழப்புகளைச் சந்தித்த இவர் தன் பிறப்பிடமான மெய்ன்ஸ் நகரம் திரும்பினார். அங்கு இவர் தம் இறுதிக்காலம் வரை அச்சக ஆலோசகராகவும், அச்சகத் தொழில் புரிவோரின் வழிகாட்டியாகவும் – பல அச்சுக்கூடங்கள் தோன்றுவதற்கு உந்துசக்தியாகவும் விளங்கினார். இத்தனை தகுதிகள் இருந்தும் இவர் தம் வாழ்நாள் இறுதிவரை வறுமையின் பிடியில் சிக்குண்டார். தன்னலம் மிக்க சிலரால் இவரது தன்னலமற்ற சேவைகள் மறைக்கப்பட்ட போதும் 1468ஆம் ஆண்டு இவர் மறைவுக்குப் பின்னர் இவர் புகழ் உலகெங்கும் பரவியது.


இன்று உலகிலேயே மிகப் பெரிய மின் நூலகமாகத் திகழ்வது குட்டன்பர்க் திட்டம் ஆகும். (www.gutenberg.org) இம்மின் நூலகத்தில் இன்று ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மின்நூல்கள் (e-text) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாய் விளங்கியவர்தான் ஜோகன்னஸ் குட்டன்பர்க் என்ற தொழில் வல்லுநர்.

fb/ChuttiVikatan

தெரியுமா?



கழுதைக்கு நுகரும் சக்தியே கிடையாது. கற்பூரம் மட்டும் அல்ல, எந்த வாசனையையும் கழுதையால் உணர முடியாது.

"மாதநிலா" சஞ்சிகையின் அற்புத படைப்புகளில் ஒன்றான

## "அன்புக்கரம்"

வறுமையின் காரணமாக பாடசாலைக் கல்வியை ஆரம்பிக்கமுடியாமலும், இடையில் விடப்பட்ட கல்வியைத் தொடரமுடியாமலும் உள்ள மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டதே இந்த "அன்புக்கரம்".

(குறிப்பாக 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும், க.பொ.த. சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும், க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும்)

நீங்கள் வறுமையின் காரணமாக கல்வியைத் தொடரமுடியவில்லையா? அப்படியாயின் கவலையை விடுங்கள் எங்கள் அன்புக்கரம் உங்களுக்குக் கைகொடுக்கும்.

உங்கள் பிரதேச கிராமசேவையாளரின் உறுதிப்படுத்தலுடன் எங்களுடைய வழமையான முகவரிக்கு நேரில் வாருங்கள்.

**வறுமையின் காரணமாக கல்விகற்க முடியாமல் இருக்கும் அனைத்து மாணவர்களுக்காகவும் உருவாக்கப்பட்டதே இந்த அன்புக்கரம்**

"உங்கள் மூன்றாவது கரம் அன்புக்கரம்"

**எதிர்பாருங்கள்**

**எமது சஞ்சிகை ஒவ்வொரு மாதத்தின் முதல் ஐந்து நாட்களுக்குள் வெளிவரும்**

என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்

**ஓகன் பயிற்சி வகுப்புக்கள்**

நன்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியரினால் பிரத்தியேக வகுப்புக்கள் நடைபெறுகின்றன





தொடர்புகளுக்கு...

**077 900 94 91**

# பேஸ்புக்கில் சுட்டதில் பட்டது







ஆசிரியர்: பரிட்சையில ஒரு பக்கம் தான் எழுதியிருக்கிறாய்... கொஞ்சம் கூட வெட்கமா இல்லை உனக்கு?

மாணவன்: டீச்சர்..... சிங்கம் SINGLE SHEET லதான் எழுதும். பண்ணிங்க தான் பக்கம் பக்கமா எழுதும்.




MOTHER TERESA







# சிந்தனைச் சிதறல் 10

## இம்மாதச் சிதறல்

பெண்களின் அரைகுறை ஆடை
அணிவது பற்றிய உங்கள் கருத்து
கவிதை நடையில்



வாசகர்களே!
மாதம் ஒவ்வொன்றிலும்
சிந்தனைச் சிதறலாக வரும் உருவப்படத்திற்கு
உங்கள் ஒவ்வொருவரின் சிந்தனைகளும்
பலதிசைகளில் சிதறுகின்றன. அவைகளை
உணர்வுமிக்க பத்துவரிகளுக்குள் எமது
வழமையான முகவரிக்கு எழுதி
அனுப்புங்கள்

## மார்ச் மாதச் சிதறல்



### 1 பணப்பரிசு பெறும் கவிதை

பலபேரை உயர்த்தியது – இதுதான் காதல்
பலபேரை கொன்றுவிட்டது–இதுவா காதல்
பலபேரை நாசமாக்கியது–இதுவும் காதல்
பலபேரை வாழவைத்தது–இதுவல்லவோ காதல்

**கவியவன்**
சாம்பல்தோட்டம், வவுனியா.

### 2

இதுவும் ஒரு வாழ்க்கைதான்
உண்மையான காதல் என்றால்
அல்லது மரணத்தின் பின்னும்
இறப்பாய்

**நிரோஜா**
மரக்காரம்பளை,
வவுனியா.

### 3

காலையில் தொடங்கி மாலையில்
முடிவது இன்றைய காதல்
முடிவே இல்லாதது அன்றைய காதல்!

**நரேஸ்**
தோணிக்கல், வவுனியா.

### பாராட்டு பெறும் கவிதைகள்

அன்றைய காதல்
வாழ்வதற்காக மட்டும்
இன்றைய காதல்
இரசிப்பதற்காக மட்டும்

**விநோதா**
கோவில்குளம், வவுனியா.

இம் மாதம் தொடக்கம் சிந்தனைச் சிதறலுக்கான
பணப்பரிசு தொகை விபரம்


**1ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 500/-**
**2ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 300/-**
**3ம் இடத்தைப் பெறும் கவிதைக்குரிய பணப்பரிசு 200/-**


சிந்தனைச் சிதறலுக்கு
பிரதான அனுசரணை: **சர்வதேச மொழித்திறன் விருத்தி நிறுவனம்**

**ILSDI**

French | Deutsch | Italian | Dutch
Korean | Danish | English | Sinhala
Tamil | IELTS | TOEFL | Ket(A1,A2)

168 1/3, 3rd Floor building, 2nd Cross Street, Vavuniya (near Nelly Star Hotel)
024-5610154 / 077 3493285




## மாயமாய்ப் போன மலேசிய விமானத்தைத் தவறவிட்டவர், காதலிக்கு அனுப்பிய ட்விட்டர் தகவல் -

தொலைபேசியூடாக உன்னைத் தொடர்புகொள்ள முடியவில்லை, நாங்கள் விமானத்தைத் தவறிவிட்டு விட்டோம். நானும் ரோரியும் நலம். நாங்கள் அந்த விமானத்தில் இல்லை."

சீனாவிற்கு செல்லவிருந்து மாயமாய்ப் போன மலேசிய விமானம் MH370இல் பயணிக்கவிருந்து தனது சக ஊழியருடன் விமானத்தைத் தவறவிட்ட கெய்டன் தனது காதலிக்கு அனுப்பிய ட்விட்டர் தகவல் இதுதான்!

மலேசியத் தலைநகரிலிருந்து பீஜிங் செல்லவிருந்த MH370 விமானம் தாய்லாந்து வளைகுடாப் பகுதியில் பயணிக்கும்போது கட்டுப்பாட்டை இழந்து தொடர்பு துண்டிக்கப்பட்டு தற்போது காணாமற்போயுள்ளது.

227 பயணிகள் மற்றும் 12 விமானப் பணியாளர்களுடன் இந்த விமானம் காணாமற்போயுள்ள நிலையில், என்ன நடந்தது என்பது பற்றிய எவ்விதத் தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை.
இந்நிலையில், கெய்டன் மற்றும் அவரது சக ஊழியர் இருவரும் விமானத்தைத் தவறவிட்டமைக்கான காரணம் தெரியவில்லை.

விமானத்தைத் தவறவிட்ட பின்னர் கெய்டன் தனது காதலிக்கு அனுப்பிய ட்விட்டர் தகவல்கள் தரப்பட்டுள்ளன.



## காலத்தின் மதிப்பு

ரயில் பெட்டியை உருவாக்கி உலகப் புகழ்பெற்றவர் புரூனல். அவரது அலுவலக அறையில் ஒரே ஒரு நாற்காலி மட்டும்தான் இருக்கும். புரூனலைப் பார்க்க வருபவர்கள் நின்று கொண்டுதான் பேச வேண்டும்.

முக்கியமானவர்கள் வந்தால், தமது நாற்காலியைக் கொடுத்து அமரச் சொல்லிவிட்டு நின்று கொண்டே பேசுவார் புரூனல். தேவையில்லாமல் அரட்டையடித்து நேரத்தை வீணடிப்பவர்களைத் தவிர்க்கவே ஒரே ஒரு நாற்காலி மட்டும் போட்டிருந்தாராம் புரூனல்.

# அறிவுக்கு சவால் 7

குறுக்கெழுத்துப் போட்டி (மாதநிலா குட்டீஸ்களுக்கானது)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | | ■ | 2 | |
| 3 | | | | ■ |
| | ■ | ■ | 4 | 5 |
| 6 | 7 | | ■ | |
| | | ■ | 8 | |

**இடமிருந்து வலம்**

1. பசுவிலிருந்து கிடைப்பது
2. வெள்ளம் வருமுன் இது கட்டவேண்டும்
3. வியாபாரத்தில் சிலசமயம் வரலாம் (குழம்பியுள்ளது)
4. கழுத்தில் அணிவது
6. பகிர்ந்து உண்ணும் பறவை
8. வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணி (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஆசிரியர் சொல்லித்தருவது
2. நாம் கண்ட முதல் தெய்வம்
5. பூவில் கோர்ப்பது (திரும்பியுள்ளது)
6. நாலில் ஒரு பங்கு, உறுப்புகளில் ஒன்று
7. பாட்டி சொல்லி தூங்கவைப்பது

குட்டீஸ்களே! விடைகளை கேள்வி இலக்கத்துடன் சேர்த்து எமக்கு அனுப்பி பரிசில்களை வெல்லுங்கள்

விடைகளை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற அனைத்து வெற்றியாளர்களும் 1ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எமது தொடர்பிலக்கத்துடன் தொடர்புகொண்டு தங்களுடைய பரிசில்கள் சம்பந்தமான விபரங்களை அறிந்து பெற்றுக்கொள்ளலாம்

போட்டிகளுக்கான விடைகளை மட்டும் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்
பயிற்சிகளை அனுப்பத்தேவையில்லை
அவைகள் நீங்கள் செய்து பழக மாத்திரமே

மார்ச் மாதத்திற்கான அறிவுக்கு விருந்திற்கு ஏராளமான குட்டீஸ்கள் சரியான பதில்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அவர்களுக்கு எங்களுடைய வாழ்த்துக்கள். அவற்றிலிருந்து குலுக்கள் மூலம் தெரிவு செய்து பரிசைப் பெறும் 3 குட்டீஸ்கள்.

**தமிழன்**
தரம்:5, வ/பூந்தோட்டம் மகாவித்தியாலயம்

**வரதன்**
தரம்: 5, நெளுக்குளம் க.ம. வித்தியாலயம்

**பி.ஆகாஷ்**
தரம்:4, வ/மத்திய மகா வித்தியாலயம்

**1** மார்ச் மாதத்திற்கான வர்ணம் தீட்டும் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா சர்வதேச பாடசாலையில் U.K.G இல் கல்வி கற்கும் V.**சன்சிகா** நெளுக்குளம், வவுனியா.

**2** 2ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் **செல்வி.பாதுஸா** இறம்பைக்குளம், வவுனியா.

**3** 3ம் இடத்தைப் பெற்று பரிசில்களை வென்ற போட்டியாளர் வவுனியா பூந்தோட்டம் மகாவித்தியாலயத்தில் தரம் 3 இல் கல்வி கற்கும் **செல்வன்.கஜான்** பூந்தோட்டம், வவுனியா.

## மாணவர் அரங்கம்

மாணவச் செல்வங்களே, 'மாணவர் அரங்கம்' என்ற பகுதியில் இணைய விரும்புகின்றீர்களா, அப்படியாயின் தங்களுடைய பெயர், முகவரி, பாடசாலை, வகுப்பு ஆகியவற்றை ஒரு வெள்ளைத்தாளில் எழுதி தங்களுடைய புகைப்படத்துடன் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்

### விடுகதைக்கான விடைகள்

| | |
|---|---|
| 1.சோளம் | 4.நெருப்பு |
| 2.முத்திரை | 5.சவப்பெட்டி |
| 3.பஞ்சு | 6.தற்கொலை |
| | 7.குயில் |

# பாலியல் நெறிபிறழ்வும் இன்றைய சமூகத்தின் பொறுப்பும்



**கார்த்திகா மணிவண்ணன்**
மாவட்டச் செயலகம்
வவுனியா.

**3) துன்புறுத்தி இன்பமடைதல்** (Sadism)

பாலியல் தேவைக்காக பாலியற்பங்காளியை வேதனைக்கு இடமாக்கிக் கொள்ளுதல் இவ்வகையைச் சாரும். நகங்களால் கீறுதல், கடித்தல், உறுப்புக்களை முடமாக்குதல், தீயினால் சுடுதல் போன்ற நடவடிக்கைகளைப் புரிவர். இந்தச் செயற்பாடு உச்சநிலையடையும் போது கொலையிலும் சென்று முடியம் ஆபத்தும் உள்ளது.

**4) துன்புற்று இன்பமடைதல்** (Masochism)

துன்புற்று இன்பமடைதலும் ஒருவகையான பாலியல் நெறிபிறழ்வாகும். அதாவது பாலியல் பங்காளியை துன்புறுத்தாது தன்னைத்தானே துன்புற்று இன்பமடைதலையே இது குறிக்கும். பெரும்பாலும் காதல் ஜோடிகளிடையே இம் மனப்பாங்கு நிலை காணப்படும்.

**5) போலியான விருப்பம்** (Fetishism)

போலியான விருப்பத்தில் முழுமையாக ஓர் ஆணை அல்லது ஓர் பெண்ணை விரும்பாது குறித்த நபரின் ஒரு பகுதியை அல்லது சிறு உறுப்புக்களை மட்டும் விரும்புதல் அல்லது குறித்த நபர் பாவிக்கும் பொருட்கள் சிலவற்றை விரும்புதல் போன்ற செயற்பாடுகள் இதனுள் அடங்கும்.

**6) பாலியல் உறுப்புக்களைக் காட்சிக்கு உட்படுத்தல்** (Exhibitionism)

எதிர்பாலர், சிறார்கள் மத்தியில் பாலியல் உறுப்புக்களைக் காட்சிக்கு உட்படுத்தலே இவ்வகைக்குள் அடங்கும். தொடர்புசாதனங்கள் வழியாக இவை தாராளமயப்படுத்தப்பட்டுள்ளன. அதிகமாக பெண்கள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

**7) பார்வை இன்பம்** (Voyeurism)

ஏனையோரது பாலியல் நடத்தைகள், பால்வினைகளைப் பார்த்தல் இதனுள் அடங்கும். தற்போது (Bule Film) நீலப்படம் பார்த்தல், பாலியல் உறவு இணையத்தளங்களுக்கு அடிமையாதல் கூட இவ்வகையுள் அடங்கும்.

**8) தொடுகை இன்பம்** (Frotterurism)

எதிர்பாலர்களை சனக்கூட்ட நெரிசலைச் சந்தர்ப்பமாக கொண்டு நெருக்குதல், இடித்தல், உரசுதல், பால்நிலை உறுப்புக்களில் தொடுகை என்பன இதனுள் அடங்கும். போக்குவரத்துப்பயணம், திருவிழா இவற்றின் போது இவை அத்துமீறப்படும் செயலாகக் கொள்ளப்படும்.

**9) தகாப்புணர்ச்சி** (Incest)

அண்ணன்-தங்கை, தாய்-மகன், பேர்த்தி-பேரன், தந்தை-மகள் என்ற இரத்த உறவுகளுடன் கொள்ளும் பாலியல் புணர்ச்சிகள் யாவும் தகாப்புணர்ச்சியாகக் கொள்ளப்படும். இவ்வாறான உறவினை சமூகங்களோ கலாச்சாரங்களோ ஏற்பதில்லை.

பாலியல் பிறழ்வுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்

பாலியல் பிறழ்வானது உளவியல் சார்ந்ததாகவே கொள்ளப்படுகின்றது. பாலியல் பிறழ்வு வறுமைப்பட்ட சூழலில், குடும்பங்கள் நெருங்கி வாழும் தன்மையும், அடிக்கடி ஏற்படும் இடப்பெயர்வுகள்.

(தொடரும்...)

## ஆங்கிலச் சொல் தருக,

1. கல் :......................
2.வாகனம் :......................
3.ஆடை :......................
4.தக்காளி :......................
5.கடலை :......................
6.புகைப்படம் :......................
7.வாய் :......................
8.மணல் :......................
9.பேனை :......................
10.துப்பாக்கி :......................

## இடைவெளியை கீழ் உள்ள சொற்களை வைத்து நிரப்புக

1. மோட்டார் சைக்கிள் ...................... போனது
2. பாட்டி தெருவோரமாக எதையோ......................சென்றார்
3......................மாணவர்கள் தாமதமாகப் போனதால் திருப்பி......................
4. எல்லோரும் ...................... உயர்த்துங்கள்
5. சாலையைக் கடக்கும்போது இரண்டு பக்கமும் அவதானித்துவிட்டு......................

கடவுங்கள், வேகமாக, பாடசாலைக்கு, தேடிக்கொண்டு, கைகளை, அனுப்பப்பட்டார்கள்

“இம்மாத குட்டிஸ்” நீங்களா,
அப்படியாயின் உங்களது
வர்ண புகைப்படத்துடன்
கீழ் உள்ள விண்ணப்பத்தை
பூர்த்தி செய்து எங்களுக்கு
அனுப்பி வையுங்கள்,
தெரிவு செய்யப்படும்
புகைப்படம்
இம்மாத குட்டிஸ்
பகுதியாக அட்டையில்
பிரசுரிக்கப்படும்.

**(தரம் 7 ற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற இயலாது)**

பெயர் :......................
முகவரி :......................
......................
பாடசாலை :......................
வகுப்பு :......................
வகுப்பாசிரியர் கையொப்பம் ......................

## விடுகதைகள்

1.வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியே உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?

2.முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?

3.மேலிலும் துவாரம், கீழிலும் துவாரம், வலதிலும் துவாரம், இடதிலும் துவாரம், உள்ளிலும் துவாரம் வெளியிலும் துவாரம் இருந்தும் நீரை என்னுள் சேமித்து வைப்பேன், நான் யார்?

4.ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் நீரை குடிக்க தந்தால் இறந்து விடுவேன், நான் யார்?

5.கண்டு பிடித்தவனும் வைத்திருப்பதில்லை, வாங்கியவனும் உபயோகிக்கவில்லை, உபயோகிப்பவனுக்கு அதனை பற்றி எதுவும் தெரியவே தெரியாது அது என்ன?

6.ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அக் குற்றம் என்ன?

7. முட்டையிடும், குஞ்சு பொரிக்காது. கூட்டில் குடியிருக்கும், கூடு கட்டத் தெரியாது. குரலில் இனிமையுண்டு, சங்கீதம் தெரியாது! அது என்ன?

என்ன குட்டீஸ்களே! விடைகளை கண்டுபிடிக்க முடியவில்லையா? 09ம் பக்கம் செல்லுங்கள்

# ஓய்வு அறியாத சிறுநீரகம்


நாம், உயிர் வாழ இன்றியமையாத அங்கங்களில் ஒன்று சிறுநீரகம். சிறுநீரகம் என்றால் பிறப்புறுப்பு என்று பலரும் நினைத்துக் கொள்கிறார்கள். தவறு! சிறுநீரகம் என்பது முதுகுத் தண்டின் இரு புறங்களிலும் விலா எலும்புகளின் கீழ்ப்புறத்தில் அவரை விதை வடிவுள்ள இரு உறுப்புகள் ஆகும்.

இவை நான்கு அங்குல நீளமும், இரண்டு அங்குல அகலமும், ஒரு அங்குல பருமனும் கொண்டதாக உள்ளன. இவற்றின் உட்பகுதி முழுவதும் மயிரிழை போன்ற மிகச் சிறிய இரத்தக் குழாய்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னப்பட்டு வலை போலக் காணப்படுகின்றன. சிறுநீரகங்களை உடலின் வடிகால் என்று கூறலாம்.

வலது சிறுநீரகம் ஈரலுக்குச் சற்றுக் கீழேயும், இடது சிறுநீரகம் மண்ணீரலுக்கு அருகிலும் அமைந்துள்ளன.

மிகச்சிறிய உறுப்பாயிருப்பினும் சிறுநீரகங்களின் பணி வியக்கத்தக்கது.

இரத்தத்திலிருந்து உடலின் கழிவுப் பொருள்களைச் சிறுநீரகங்கள் பிரித்தெடுத்து சிறுநீராக வெளியேற்றுகின்றன. மேலும், இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருப்பது எலும்புகளை உறுதிப் படுத்துவது இரத்தச் சிவப்பணுக்களின் உற்பத்தியைத் தூண்டுவது உடலின் நீர் மற்றும் அமிலப் பொருள்களைக் கட்டுப்படுத்துவது உயிர் நிலைப்பதற்கான இரசாயன அளவுகளைக் கண்காணிப்பது போன்ற இன்றியமையாத பணிகளைச் செய்யும் சிறுநீரகங்கள் உண்மையிலேயே வியப்புக்குரியவை.




சிறுநீரகத்தில் உற்பத்தியாகும் சிறுநீர், குழாய் மூலமாக சிறுநீர்ப் பையினை அடைகிறது. சிறுநீர்ப் பையானது விரிந்து கொடுக்கக்கூடிய தசைகளால் ஆனது. அவ்வப்போது, இத்தசைகள் சுருங்கி உள்ளிருப்பதை வெளியேற்றுகிறது.

சிறுநீர்ப் பையில் இருக்கும் நரம்பு மண்டலம் சிறுநீரகத்திலிருந்து சிறுநீரை வடிகுழாய்கள் மூலம் துளித்துளியாக சிறுநீர்ப் பைக்குள் கொண்டு வந்து சேர்க்க உத்தரவளிப்பது, சிறுநீர்ப்பையை விரிவடையச் செய்வது சிறுநீரைத் தேக்கி வைப்பது சிறுநீர்ப்பை நிரம்பியதும் மூளைக்குத் தெரிவிப்பது ஆகிய பல சிறப்பான பணிகளைச் செய்கிறது.

சிறுநீர் இறக்குக் குழாய் அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடுகள் உண்டு. பெண்களுக்கு இது வெறும் சிறுநீரை வெளியேற்றும் குழாயாக மட்டுமே பயன்படுகிறது. ஆனால் ஆண்களுக்குப் பிறப்புறுப்பின் ஒரு பகுதியாகவும் இயங்குகிறது.

சிறுநீரகம் சரியாக வேலை செய்யாவிட்டால் ஒருநாள்கூட நம்மால் ஆரோக்கியமாக இருக்க முடியாது. உடலில் எதிர்பார்க்காத தொந்தரவுகள் வர ஆரம்பித்து விடும். விபத்தினால் உடல் பாகங்கள் நசுங்கி உடல் தசைகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, சிறுநீரகங்களிலுள்ள வடிகட்டிகள் அடைபட நேரிட்டாலும் சிறுநீரகங்கள் செயல் இழந்து போவது உண்டு.

கட்டுப்பாட்டில் இல்லாத சர்க்கரை நோய், கட்டுப்பாட்டில் இல்லாத ரத்த அழுத்தம் இவைகளும் சிறுநீரகச் செயல் இழப்பு ஏற்படக் காரணங்களாகும்.

தவிர, சிறுநீர்ப் பாதையில் கிருமிகளின் தாக்கம் ஏற்படுவதனாலும் சிறுநீரகங்கள் பாதிக்கப்படலாம்.

சிறுநீரகத்தைப் பாதுகாப்பது எவ்வாறு?


ஒருநாளைக்கு எட்டு முதல் பத்து டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும் பாலில் தயாரித்த உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும் மீன், கோழி போன்றவை சிறுநீரில் அமிலத்தன்மையை அதிகரிக்கச் செய்யும் என்பதால், அதிகம் உண்பதைத் தவிர்க்க வேண்டும் பொறித்த உணவுகளை, மசால் சேர்த்த உணவுகளைக் குறைக்க வேண்டும்.

திராட்சை, ஸ்ட்ராபெர்ரி போன்ற பழவகைகள், பூசணிக்காய், வாழைத்தண்டு போன்ற நீர்ச்சத்து மிகுந்த காய்களையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் கொழுப்பையும், உப்பையும், இனிப்பையும் குறைத்துக் கொள்ள வேண்டும். காலை வெறும் வயிற்றுடன் ஸ்கிப்பிங், உடற்பயிற்சி, வீட்டுவேலை ஆகியவற்றைச் சுறுசுறுப்புடன் செய்து வருவது உடலுக்கு நல்லது.

சர்க்கரை நோயாளிகள் சர்க்கரையைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் ரத்த அழுத்த நோய் உள்ளவர்கள் ரத்த அழுத்தத்தைக் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள வேண்டும் சுத்தமில்லாத தண்ணீரைக் குடிக்கக்கூடாது சுகாதாரமற்ற உணவைச் சாப்பிடக்கூடாது கண்ட கண்ட மருந்து, மாத்திரைகளைக் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

இவற்றை எல்லாம் ஒழுங்காகக் கடைப்பிடித்தால் சிறுநீரகப் பிரச்சனை என்பது வரவே வராது.

இருபத்து நான்கு மணி நேரமும் வேலை செய்து கொண்டிருக்கும் சிறுநீரகங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியது நமது கடமை!



"பிள்ளை வரம் கேட்டு" கோவில்
கோவிலாக ஏறி இறங்கும்
யாருக்கும் தெரிவதே
இல்லை..........

"அம்மா வரம் கேட்டு" அனாதை
இல்லத்தில் காத்திருக்கும்
குழந்தைகளின் முகம்.......

## தெரிந்து கொள்ளுங்கள்
## 10 ஆச்சரியமான உண்மைகள்

1. இன்னும் 100 வருடம் கழித்து பேஸ்புக்கில் 50 கோடி இறந்தவர்களின் அக்கவுன்ட் இருக்குமாம்.

2. குதிக்க முடியாத ஒரே உயிரினம் யானை தான்.

3. டைட்டானிக் கப்பலை உருவாக்க 7 மில்லியன் டாலர் செலவானது. ஆனால் டைட்டானிக் படத்தை உருவாக்க 200 மில்லியன் டாலர் செலவாகியுள்ளது.

4. சோனி கம்பெனியின் ஒரிஜினல் பெயர் டாட்சுகன்.

5. யூடியூபில் இப்பொழுது உள்ள வீடியோவை முழுவதுமாக பார்க்க 1000 வருடம் தேவைப்படும்.

6. ஒருவர் சந்தோஷமாக அழும் பொழுது முதலில் வலது கண்ணிலும், வலியால் அழும் பொழுது இடது கண்ணிலும் கண்ணீர் வரும்.

7. 99 சதவீத மக்கள் தங்கள் பாஸ்வேர்டை டைப் செய்யும் பொழுது ஒரு எழுத்து தப்பாக டைப் செய்துவிட்டால் பாஸ்வேர்டை முழுவதுமாக அழித்து புதிதாக டைப் செய்கின்றனர்.

8. ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தின்ஆய்வின் படி ஒரு நபர் காதலில் விழும் பொழுது தனது இரண்டு நெருங்கிய நண்பரை இழந்துவிடுகிறாராம்.

9. கெட்டு போகாத ஒரே உணவு பொருள் தேன்

10. வெங்காயம் உரிக்கும் போது ச்சீவிங் கம் சாப்பிட்டால் அழுகை வராதாம்.

"நீங்க அந்த மாலாவைக் காதலிக்கிறீங்களாமே?"
"யார் சொன்னா?"
"அந்த மாலாவைக் காதலிச்ச கோபி சொன்னான்!"
"சரி! நீ அந்தத் தாமுவைக் காதலிக்கிறியாமே?"
"யார் சொன்னா?"
"உன்னைக் காதலிச்ச கோபி சொன்னான்!"



# மாதநிலா குட்டீஸ்

## சிறுகதை

## மூடர்களைத் திருத்த முடியாது

ஒரு பணக்காரரிடம் முட்டாள் வேலைக்காரன் ஒருவன் இருந்தான்.

அவன்..அந்த பணக்காரரைத் தேடி யார் வந்தாலும் பணக்காரரிடம் " ராமசாமி வந்திருந்தார்...கிருஷ்ணசாமி வந்திருந்தார் " என்பான்.

இதனால் வருபவர்கள் தங்களுக்கு வேலைக்காரன் மரியாதை தருவதில்லை என்று பணக்காரரிடம் முறையிட்டனர்.

பணக்காரர் உடனே வேலைக்காரனை அழைத்து ..."இனி என்னைத் தேடி வருபவர்களுக்கு நீ மரியாதை தர வேண்டும்..அவர்களை திரு.ராமசாமி..திரு.கிருஷ்ணசாமி என்று சொல்லவேண்டும்" என்றார்.

முட்டாள் வேலைக்காரன் ..அதற்கு பிறகு யார் வந்தாலும்..எது வந்தாலும் அதற்கு முன் ..திரு.. திரு.. என்ற அடை மொழியைச் சேர்த்தான்.

சில நாட்களில்....வேலைக்காரனின் " திரு" பழக்கம் பணக்காரருக்கு கோபத்தை ஏற்படுத்தியது.

மீண்டும் வேலைக்காரனை கூப்பிட்டு " இனி..உன் வாயால் " திரு" என்ற சொல்லைக் கேட்டால் ...உன்னை வேலையை விட்டு நிறுத்தி விடுவேன் " என்றார்.

வேலைக்காரனும் பயந்தபடியே " சரி" என தலையை ஆட்டினான்.

ஒரு நாள் ..இரவு பணக்காரர் வீட்டிற்கு



திருடர்கள் வந்தனர்....பணக்காரரின் அனைத்து பணம்,நகைகளை கொள்ளையடித்து ஓட முற்பட்டனர்.

அதை வேலைக்காரன் பார்த்துவிட்டான்.. வேகமாக பணக்காரர் படுக்கை அறைக் கதவை தட்டினான்.அவரும் கதவைத் திறந்தார்.உடன் வேலையாள்" டன் வந்து டிண்டு "

போனான் என்றான்.

பணக்காரருக்கு என்ன சொல்கிறான் என்று புரியவில்லை.பலமுறை கேட்டும் .....நான் சொன்னால் என்னை வேலையை விட்டு துரத்தி விடுவீர்கள்" என்றான்.


பணக்காரரும் .." உன்னை துரத்த மாட்டேன்..சொல்" என்றார்.

" திருடன் வந்து திருடிண்டு போனான் " என்றான்...அப்போதுதான் பணக்காரருக்கு " திரு " என்ற வார்த்தையை சொல்லக் கூடாது என்று சொன்னது ஞாபகம் வந்தது.

மூடர்களை திருத்துவது என்பது மிகவும் கடினம் என்று பணக்காரர் உணர்ந்தார். தன் விதியை நொந்து கொண்டார்.

நாமும் மூடர்களுக்கு அறிவுரை சொல்லும்போது மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

## மீண்டும் முதலிடத்தை தன்வசப்படுத்திய பில்கேட்ஸ்



உலகின் கோடீஸ்வரர்கள் பட்டியல் மீண்டும் பில்கேட்ஸ் முதலிடம் பெற்றுள்ளார்.

அமெரிக்காவின் போர்ப்ஸ் சஞ்சிகை வருடந்தோறும் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிட்டுவருகிறது.

இதன்படி இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த மென்பொருள் நிறுவனத்தின் தலைவர் பில் கேட்ஸ் மீண்டும் முதலிடம் பெற்றுள்ளார்.

கடந்த சில வருடங்களாக இவர் இந்த பட்டியலில் பின்தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பில்கேட்ஸின் தற்போதைய சொத்துமதிப்பு 76 பில்லியன் டொலர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தப் பட்டியலில் தொழிலதிபர் முகேஷ் அம்பானி உட்பட 56 இந்தியக் கோடீஸ்வரர்கள் இடம் பெற்றுள்ளனர்.

அத்துடன், முகநூல் நிறுவனர் மார்க் சூசர்பெர்க் இந்த வருடம் அதிக லாபம் ஈட்டியவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

அவரது வருமானம் இந்த ஆண்டு மாத்திரம் 15.2 மில்லியன் அமெரிக்க டொலரில் இருந்து 28.5 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எதிர்ப்பாற் சொல் தருக.

1. கறுப்பு : ..........................
2. பிறப்பு : ..........................
3. சத்தம் : ..........................
4. ஆழம் : ..........................
5. நீளம் : ..........................
6. துக்கம் : ..........................
7. சுமை : ..........................
8. உயரம் : ..........................
9. கறுப்பு : ..........................
10. வேகம் : ..........................



## மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டத்தில் வரைக

# வயிற்றில் வளர்வது ஆண் குழந்தையா என்பதை அறிய

அக்காலத்தில் எல்லாம் வயிற்றில் வளரும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதை ஒருசில அறிகுறிகள் கொண்டு சொல்வார்கள்.

இது நிரூபிக்கப்படாவிட்டாலும், பலருக்கு சரியாக நடந்துள்ளதால், இதனை அனைவருமே கண்மூடித்தனமாக நம்பிவருகின்றோம். இங்கு வயிற்றில் வளரும் குழந்தை ஆண் தான் என்பதை வெளிப்படுத்தும் சில அறிகுறிகளைக் கொண்டு கண்டுபிடிக்கலாம். இப்போது அந்த அறிகுறிகள் என்னவென்று பார்ப்போம்.

வயிற்றில் வளரும் குழந்தை ஆண் என்பதை கர்ப்பிணிகளின் வயிற்றின் நிலையைக் கொண்டே அறியலாம். எப்படியெனில், வயிற்றில் ஆண் குழந்தை என்றால், மேல் வயிறு பெரிதாகவும், கீழ் வயிறு சற்று சிறியதாகவும் இருக்குமாம்.

நிறைய கர்ப்பிணிகள் சிறுநீர் கழிக்கும் போது, அதன் நிறத்தைப் பார்ப்பார்கள். ஏனெனில் சிறுநீரின் நிறமானது அடர் நிறமாக இருந்தால், வயிற்றில் வளர்வது ஆண் குழந்தை என்று அர்த்தமாம். இதைக் கொண்டும் அக்காலத்தில் உள்ள மக்கள் வயிற்றில் வளர்வது ஆணா, பெண்ணா என்று அறிந்து கொண்டு வந்தார்கள்.

கர்ப்பத்தின் போது, மார்பகத்தின் அளவானது பெரிதாக ஆரம்பிக்கும். அதிலும் உண்மையாக இடது மார்பகம் வலது மார்பகத்தை விட பெரிதாக ஆரம்பிக்கும். ஆனால் வயிற்றில் ஆண் குழந்தை இருந்தால், இடது மார்பகத்தை விட வலது மார்பகத்தின் அளவு பெரிதாக இருக்குமாம்.

கர்ப்ப காலத்தில் எப்போதும் பாதம் குளிர்ச்சியாக இருந்தால், அதுவும் ஆண் குழந்தை பிறக்கும் என்பதற்கான அறிகுறிகளுள் ஒன்றாகும்.

ஒவ்வொரு முறை மருத்துவரை சந்திக்கும் போதும், குழந்தையின் இதயத்தின் துடிப்பை கண்காணித்து வாருங்கள். ஏனெனில் குழந்தையின் இதயத்தின் துடிப்பானது 140-க்கு கீழே இருந்தால், வயிற்றில் வளர்வது ஆண் குழந்தை என்று அர்த்தமாம்.


வயிற்றில் வளர்வது ஆண் குழந்தை என்பதை வெளிப்படுத்தும் அறிகுறிகளில் ஒன்று தான் கூந்தலின் வளர்ச்சி. கர்ப்ப காலத்தில் கூந்தலின் வளர்ச்சியானது அளவுக்கு அதிகமாக இருந்தால், அது ஆண் குழந்தை என்பதற்கான அறிகுறிகளுள் ஒன்று.

கர்ப்பமாக இருக்கும் போது உணவுப் பொருட்களின் மீது ஆசை எழுவது சாதாரணம் தான். ஆனால் புளிப்பு மற்றும் உப்புள்ள உணவுப் பொருட்களின் மீது ஆசை அதிகமாக இருந்தால், அது வயிற்றில் ஆண் குழந்தை உள்ளது என்று அர்த்தம்.

கர்ப்பமாக இருக்கும் நேரத்தில் அதிகப்படியான சோர்வு இருக்கும். இருப்பினும்., அப்படி சோர்வுடன் இருக்கும் போது, இடது பக்கத்தில் தூங்கும் பழக்கம் இருந்தால், அதுவும் ஆண் குழந்தைக்கான அறிகுறிகளுள் ஒன்றாகும். எவ்வளவு தான் க்ரீம்களை கைகளுக்கு தடவினாலும், கைகள் வறட்சியுடனும், வெடிப்புகள் ஏற்பட ஆரம்பித்தாலும், அதுவும் ஆண் குழந்தை தான் என்பதற்கான அறிகுறிகளுள் ஒன்று.



# பெண்கள் நோய்




வயசுல பெரியவங்களா இருப்பாங்க. சின்னக் குழந்தைங்க மாதிரி கைல எப்பவும் பிஸ்கட் மாதிரி ஏதாவது வச்சு, சாப்பிட்டுக்கிட்டே இருப்பாங்க. கேட்டா அல்சர்னு சொல்வாங்க. அல்சர் வந்தவங்க வயிறை காலியா விடக்கூடாது. அடிக்கடி கொஞ்சமா எதையாவது சாப்பிட்டுக்கிட்டே இருக்கனும்.

அதென்ன அல்சர்?

நம்ம வயிற்றுக்குள்ள, வயிற்றைப் பாதுகாக்க வழவழப்பான திரை அமைப்பு இருக்கு. ஜீரண நீர் சுரந்து, உணவோடு சேர்ந்து செரிமானமாகும். சாப்பாட்டுல காரமோ, புளிப்போ, உப்போ அதிகமானா, அது அந்தத்திரை அமைப்பை சீண்டிப் பார்க்கும். லேசா கிழிஞ்சாகூட, நேரடியா வயிறு அல்லது குடலுக்குத்தான் பாதிப்பு. இதன் காரணமா அடி வயித்துல வலி, புளிச்ச ஏப்பம், நெஞ்செரிச்சல், சாப்பிட்டது செரிக்காம அப்படியே தொண்டையிலே நிக்கிற மாதிரி உணர்வு இதெல்லாம் இருக்கும். இதுதான் அல்சர்.

அல்சர் ஏன் வருது?

முதல் காரணம் நேரங்கெட்ட நேரத்து சாப்பாடு, காலை உணவைத் தவிர்க்கிறது, மதிய சாப்பாட்டைத் தள்ளிப் போடறது, அடிக்கடி காபி, டீயா குடிச்சு வயிற்றை நிரப்பறது .

சாதாரண தலைவலி, காய்ச்சல்னா உடனே மாத்திரை போடற பழக்கம் பலருக்கு உண்டு. இப்படி தானாவே எந்தப் பிரச்சினைக்கும் அடிக்கடி மாத்திரை சாப்பிடறவங்களுக்கும் கட்டாயம் அல்சர் வரும்.

ரொம்ப சக்தி வாய்ந்த ஆன்ட்டிபயாடிக்ஸ் சாப்பிடறதும் காரணம். ஏதோ சுகமின்மைக்காக டாக்டரைப் பார்க்கறோம். டாக்டர் ஆன்ட்டிபயாடிக் எழுதிக் கொடுப்பார். ஆன்ட்டிபயாடிக் கொடுக்கிறப்ப, பிகாம்ப்ளக்ஸூம், லேக்டோ பேசிலஸூம் கலந்த மாத்திரையும் அவசியம் கொடுக்கனும். இதை சில டாக்டர்ஸ் செய்யறதில்லை. டாக்டர்ஸ் எழுதிக் கொடுத்தாலும், 'சத்து மாத்திரை வேணாம்'னு சொல்லி ஆன்ட்டிபயாடிக் மட்டும் வாங்கிச் சாப்பிடுறவங்களும் இருக்காங்க. சில வகை மருந்துகளை சாப்பிடறப்ப, வயிறு வலி, நெஞ்சு எரிச்சல் வர்றதை உங்கள்ல பல பேர் ஃபீல் பண்ணியிருப்பீங்க காரணம் இதுதான்.

அதிக காபி, டீ, ஃபாஸ்ட் ஃபுட் அயிட்டங்கள், சிகரெட், கோலா கலந்த பானங்கள், ஊறுகாய், காரமான உணவுகள் இதெல்லாமும் அல்சருக்கு காரணம்!

மூட்டுவலி போன்ற சில பிரச்சினைகளுக்கு காலங்காலமா மருந்து எடுத்துப்பாங்க சிலர். மாத்திரைகள் கொஞ்சம் ஸ்ட்ராங்கா இருக்கலாம். அதுக்கேத்தபடி சாப்பாடு இருக்கனும். தவறினா, அல்சர்ல போய் முடியலாம். அபூர்வமா சிலருக்கு பரம்பரையாகவும் அல்சர் பாதிக்கலாம். அடிக்கடி உணர்ச்சிவசப்படறவங்களுக்கு அல்சர் இருக்கும்.

எடை குறையறது, ரத்த சோகை, வாந்தி இதெல்லாம்கூட அல்சரோட அறிகுறிகளா இருக்கலாம். எந்த அறிகுறியும் தினசரி தொடர்ந்தா உடனே டாக்டரை பார்க்கனும். அல்சரை முழுமையா குணப்படுத்திடலாம். வந்ததைப் போக்க சிகிச்சைகள் உண்டு. வராம இருக்க? சரியான நேரத்துக்கு சாப்பாடு, சரிவிகித சாப்பாடு ரெண்டும் முக்கியம். கோபத்தைக் குறைச்சுக்கனும்.

அல்சர் வந்தவங்களுக்கான டிப்ஸ்

காரச்சத்து உள்ள உணவுகளைத் தவிர்க்கனும். குழைய வேக வச்ச அரிசி சாதம், அவல், பொரில கஞ்சி மாதிரி செய்து சாப்பிடலாம். கீரை, காய்கறிகளைக்கூட நல்லா வேக வச்சு, மசிச்சு, சாப்பிடனும். பாலுக்குப் பதில் மோர் அதிகம் சேர்த்துக்கலாம். ஸ்ட்ராங்கான காபி, டீ வேண்டாம். அதிகமான தாளிப்பு, இனிப்புகள், பொரிச்ச உணவுகள், பாதி பழுத்தும் பழுக்காத பழங்கள், பச்சை காய்கறிகள் (வெங்காயம், வெள்ளரி உள்பட), இஞ்சி, கரம் மசாலா, காரமான கிரேவி இதெல்லாம் அறவே தவிர்க்கனும். மூனு வேளை மூக்கைப் புடிக்க சாப்பிடாம, கொஞ்சமா, அடிக்கடி சாப்பிடலாம். எதையும் கடிச்சு, நன்கு மென்று பொறுமையா சாப்பிடனும்.

நீரிழிவு வந்தவங்களுக்கு சொல்ற மாதிரிதான் அல்சர் வந்தவங்களுக்கும் விருந்தும் கூடாது விரதமும் கூடாது!

# பெரிய வீட்டு கமலி

–காதல் தொடர்கதை

"இல்லே அன்பு, பையனையும், பொண்ணையும் கட்டி குடுத்தாட்டாங்க. பொண்ணை கூட அமெரிக்காவுலதான் கட்டி குடுத்து இருக்காங்களாம், பெரியவரு சொன்னாரு. பெரிய வீட்டம்மா காலமான பின்னாடி எவ்ளோ நாள்தான் பெரியவரு அவ்ளோ பெரிய வீட்ல தனியா இருப்பாரு? அவ்ளோ பெரிய வீட்டை பெரியவராலையும் பார்த்துக்க முடியல. அதான் மெட்ராஸ் போயி அவுங்க தங்கச்சி வீட்ல தங்கிக்கிறேன்னு சொல்றாரு"

"சரி மாமா. வீட்டை ஒரு தடவை பார்த்துட்டு சொல்றேனே, சரியா?"

பெரிய வீட்டு தெருவுக்குள்ள என் கார் நுழைஞ்சப்ப மனசுக்குள் ஏதோ ஒரு பெரிய பாரம் வந்து அழுத்த ஆரம்பிச்சது. இதே தெருவுல நான் சைக்கிள்ல போய்ட்டு இருக்கும்போது ரொம்ப சாதாரணமானவனா இருந்தேன். அதே வீட்டுக்கு டிவி பார்க்க போவேன். தீபாவளி, பொங்கல் இனாம் வாங்க போவேன். இன்னிக்கு, நல்ல நிலைமைக்கு வந்து அதே வீட்டை வாங்குற அளவுக்கு வந்துட்டேன். பெரிய வீட்டுக்கு முன்னாடி காரை நிறுத்திட்டு வீட்டைப் பார்த்தேன்.

ஒரு சதவீதம் கூட குறியாத கம்பீரம் ஆனா வெள்ளையடிச்சு பல வருஷம் இருக்கலாம்னு தோணிச்சு. கமலி இருந்த அறையின் ஜன்னல் பார்த்தேன், அன்று பார்த்த கமலி அங்கே இல்லை, ஆனால் எனக்கு இன்னும் அதே காதல் இருந்தது, எதிர்பார்ப்பு இருந்தது.

நமக்காக கமலி காத்துட்டு இருக்க மாட்டாளா என்ற கற்பனை. இந்த வீட்டை வாங்க இன்னிக்கு ஆண்டவன் கட்டளை குடுத்து இருக்கான். அன்னிக்கே குடுத்து இருந்தா கமலியையும் சேர்த்து இந்த வீட்டையும் காப்பாத்தி இருப்பேனே. மனசுக்குள் ஆயிரமாயிரம் எண்ணங்க வர பெரியவர் வந்தார். தனிமை அவரை வாட்டி இருக்க வேண்டும், கம்பீரம் அந்தளவுக்கு கலைந்து இருந்தது.

"வாப்பா, அன்பு. எப்படி இருக்கிற. கமலிகூட அமெரிக்காதான்பா. முடிஞ்சா ஒரு எட்டு போயி பார்த்துட்டு வா."

"நல்லா இருக்கேன் ஐயா" காலம் மாறினாலும் என் மரியாதை மட்டும் மாறாதது எனக்கே ஆச்சர்யத்தை குடுத்தது.

"வீட்டை ஒரு தடவை பார்த்துக்கிறேங்க ஐயா"

"சரிப்பா"

புரோக்கர் பொன்னுசாமி கூடவே ஒவ்வொரு அறையாய் பார்த்துட்டே வந்தோம். கமலி அறைக்கு சீக்கிரம் போக மனசு அவசரப்பட்டது.

"பார்த்துட்டு வா அன்பு. நான் ஐயாகிட்ட பேசிட்டு இருக்கேன்"

அவர் போனது கமலி அறையில் நுழைந்தேன். பல கற்பனைகள், பல வருசங்கள் போனாலும், இருவருக்குமே கல்யாணம் ஆகியிருந்தாலும் அந்த காதல் மட்டும் கொஞ்சமும் குறையாமல் ஞாபகத்தில் இருந்தது. அவள் பீரோ திறந்து பார்த்தேன். பழைய துணிமணிகள், பட்டு குஞ்சங்கள், பழைய புத்தகங்கள். நான் பரிசளித்த பாலகுமாரனின் "மெர்குரிப்பூக்களும்" இருந்தது. செல்லரித்த நிலைமையில் இன்னும் என் ஞாபகத்தை சொல்லும் ஒரு சுவடு. பிரித்தேன், மங்கலாய் தெரிந்தது என் கையெழுத்து. "என் உயிர் கமலிக்கு". நடுப்பக்கத்தில் அதே காதல் கடிதம், இன்னும் அதே காதலோடு என்னைப்பார்த்து சிரித்தது. மடித்து வைக்கப்பட்டு இருந்த கடிதத்தைப் பிரித்தேன். நைந்து போன நிலைமையில் இருந்தாலும் என் எழுத்துக்கள் மட்டும் அப்படியே, கடிதத்தின் பின்னால் பார்த்தேன்

"அன்பு!
எனக்கு மட்டும்"

கமலி எழுதி இருக்கிறாள்.


கடிதத்தை மூடி புத்தகத்துக்குள் வைத்துவிட்டு, காருக்குள் போய் உக்காந்து கொண்டேன்.

"அன்பு. இருப்பா, என்ன சொல்ற வீட்ட பார்த்தியே புடிச்சு இருந்துச்சா? முடிச்சுடலாமா?"

"இல்ல மாமா, வேணாம். விட்டுருங்க. எனக்கு இஷ்டம் இல்லே" வாழ்நாள் முடியர வரைக்கும் இனிமேல் இந்தத் தெரு பக்கம் வரவே கூடாது என

(தொடரும்...)

## வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள்



பெயர் : ..............................

முகவரி : ..............................

தரம் : ..............................

தொ.பே.இல : ..............................

பாடசாலை : ..............................

வ.ஆசிரியர் ஒப்பம் : ..............................

குறிப்பு: 5ம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவர்களின் ஆக்கங்கள் மட்டுமே போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படும்

உங்கள் ஆக்கங்களை 20.03.2014 க்கு முன் கிடைக்குமாறு எமது வழமையான முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

தெரிவு செய்யப்படும்
3 வர்ணத்திற்கு பாடசாலை
உபகரணப் பொருட்கள்
பரிசாக வழங்கப்படும்

வர்ணம் தீட்டி பரிசுகளை வெல்லுங்கள் போட்டிக்கு பிரதான அனுசரணையாளர்

கையடக்கத் தொலைபேசிகளின் ராஜன்

இல:34, சந்தை சுற்றுவட்ட வீதி,
வவுனியா.
077 6362555, 077 0565384
077 7577080


Ke.Pe.L
Video Vision & Mobile

# தமிழர்களுக்கு எதிரான படமல்ல "இனம்"



தமிழர்களுக்கு எதிரான படமாக "இனம்" உருவாகவில்லை என தமிழ்த் திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர் விக்ரமன் தெரிவித்தார். தணிக்கைச் சான்றிதழ் பெற்ற பின் ஒரு படத்துக்கு எதிராக வரும் புகார்கள் படைப்புச் சுதந்திரத்துக்கு எதிரானது என்றும் அவர் தெரிவித்தார்.

லிங்குசாமியின் தயாரிப்பில், சந்தோஷ் சிவன் இயக்கியுள்ள படம் "இனம்". ஈழத்தமிழர்களின் போராட்டத்தை தவறாக சித்திரிக்கும் விதத்தில் இப்படத்தில் காட்சிகள் இடம் பெற்றுள்ளதாக சில தமிழ் அமைப்புகள் கண்டனம் தெரிவித்தன. இது தொடர்பாக விளக்கம் அளிக்கும் வகையில் தமிழ்த் திரைப்பட . இயக்குநர்கள் சங்க நிர்வாகிகளின் செய்தியாளர்கள் சந்திப்பு சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்றது.




இதில் இயக்குநர்கள் சங்கத் தலைவர் விக்ரமன், இயக்குநர்கள் ஆர்.கே.செல்வமணி, வி.சேகர், பாலாஜி சக்திவேல், சசி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தியாளர்களிடம் இயக்குநர் சங்கத் தலைவர் விக்ரமன் கூறியது:

சந்தோஷ்சிவன் இயக்கத்தில் உருவாகியுள்ள "இனம்" திரைப்படத்தை இயக்குநர் சங்கத்தை பல உறுப்பினர்கள் பார்த்துள்ளனர். "இனம்" படத்தில் தமிழ்ச் சமூகத்துக்கு எதிராகவோ, இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவோ எந்தவொரு காட்சியும் இல்லை என்பதுதான் அவர்களுடைய ஒருமித்த கருத்தாக உள்ளது.

தமிழ்ச் சமூகத்துக்கு எதிராக எதிர்மறை கருத்துகள் எழுந்த நேரங்களில் எல்லாம் திரைத்துறை முன் நின்றுள்ளது. அவ்வாறு இருக்கையில் தமிழ்ச் சமூகத்துக்கு எதிரான எந்தவொரு கருத்துக்கும் நாங்கள் துணை நிற்க மாட்டோம். "இனம்" திரைப்படம் ஈழப் போரின்போது நடந்த சம்பவங்களின் முழுப் பதிவாக உருவாகியுள்ளது. இப்படைப்பு தமிழர்களைக் கடந்து உலக மக்களைச் சென்றடைய வேண்டும்.

தணிக்கைச் சான்றிதழ் பெற்ற பின்னர் ஒரு படத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பது தொடர் கதையாகி வருகிறது. இவ்வாறு எழும் புகார்கள் படைப்புலகத்துக்கு எதிரானது. படைப்புச் சுதந்திரத்துக்கு எதிரானது என்றார் விக்ரமன்.

முன்னதாக சென்னை பெருநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் "இனம்" திரைப்படம் தமிழர்களின் இனப் போராட்டத்தை கொச்சைப்படும் விதத்தில் எடுக்கப்பட்ட படம் என்பதால் தடை விதிக்க கோரி புகார் மனு அளித்தனர்.

சினிமா

# இசைஞானி இளையராஜாவின் 999 வது படம் "ஒரு ஊரில.."

விக்னேஷ் புரொடக்‌ஷன்ஸ் என்ற பட நிறுவனம் சார்பாக பி.வேலுச்சாமி தயாரிக்கும் படம் "ஒரு ஊர்ல". இந்த படத்தில் 'பருத்திவீரன்' வெங்கடேஷ் கதாநாயகனாக நடிக்கிறார். இவர் 'பருத்திவீரன்' படத்தில் பிரியாமணியின் முறை மாமன் வேடத்தில் நடித்தவர். கதாநாயகியாக நேகா பட்டீல் நடிக்கிறார். இவர் கன்னடப் படங்களில் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருப்பவர்.

மற்றும் இந்திரஜித், அன்னபூரணி, 'நான் கடவுள்' முரளி, சுந்தர், சிவா, ஜப்பான் கண்ணன், முல்லை ஆடலரசு கோதண்டபாணி, மாதவி, வன ஜோதி, பேபி சௌந்தர்யா உள்பட பலர் நடித்துள்ளனர். இவர்களுடன் கதாப்பாதிரங்களுக்கேற்ப ஏராளமான கிராம மக்களும் இதில் நடிகர், நடிகைகளாக



நடித்திருக்கிறார்கள்.

படத்திற்கு இளையராஜா இசையமைத்துள்ளார். மொத்தம் ஐந்து பாடல்கள். ஐந்து பாடல்களிலும் கிராமத்து மண்ணின் மணம் இருக்கும். இது இளையராஜா இசையில் வெளியாகும் 999 வது படம். பத்திரிகையாளர்களுக்கு அனுப்பியுள்ள செய்திகளிலும் இந்தப் படம் இளையராஜாவின 999வது படம் என்றே குறிப்பிட்டுள்ளார் தயாரிப்பாளர் வேலுச்சாமி. எனவே, பாலாவின் 'தாரை தப்பட்டை' படம்தான் இசைஞானி இசையமைக்கும் 1000–மாவது படம் என்பது உறுதியாகிவிட்டது.

# விஜய்,முருகதாஸ் படத்தலைப்பு?

விஜய் ஏ.ஆர். முருகதாஸ் இருவரும் இணைந்து மீண்டும் பணியாற்றும் படத்திற்கு 'கத்தி' என தலைப்பு வைத்திருக்கிறார்கள்.

'துப்பாக்கி' படத்தைத் தொடர்ந்து விஜய், ஏ.அர்.முருகதாஸ் இயக்கும் புதிய படத்தில் நடிக்கிறார். இப்படத்தின் படபிடிப்பு விறுவிறுப்பாக பல்வேறு இடங்களில் நடந்து வருகிறது. இதில் விஜய்க்கு ஜோடியாக சமந்தா நடித்து வருகிறார். அனிருத் இசையமைக்கிறார். அஜித்தின் ஆரம்பம் படத்தை போலவே தலைப்பை வைக்காமலேயே படப்பிடிப்பை தொடங்கிவிட்டார்கள்.



இதனால் படத்திற்கான தலைப்பு என்னவென்று தெரியாமல் பல பெயர்கள் அடிப்பட்டுக்கொண்டு இருந்தன. படத்திற்கு வாள், தீரன் என பெயரிடப்பட்டதாக வதந்திகள் வெளியாகின. ஆனால் அதையெல்லாம் முருகதாஸ் தரப்பு மறுத்து வந்தது. எனவே, படத்தின் தலைப்பு ரசிகர்கள் மத்தியில் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் இப்போது இந்த படத்திற்கு 'கத்தி' என தலைப்பு வைத்திருப்பதாக இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் இந்தப் படத்தில் விஜய் இரண்டு கேரக்டரில் நடிக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அதைப்பற்றி ஒரு சின்ன தகவலும் கிடைத்துள்ளது. விஜய் நடிக்கும் இரண்டு கேரக்டரில் சிவானந்தம் என்ற நல்லவர் கேரக்டர் ஒன்று. இன்னொன்று கொல்கத்தாவை சேர்ந்த ரௌடி கேரக்டர். இந்த இரண்டு கேரக்டர்களுக்கிடையில் நடக்கும் கதையாம் கத்தி என்று கூறப்படுகிறது.

# திவ்யா ஒரு கேள்விக்குறியா?

(புதிய குடும்பத் தொடர்...)

கார்கால இருட்டும் கருகுமலைப் பொழுதும் அவளைப் பாடாய்ப்படுத்தியது. பகல் முழுவதும் அடிவாங்கியதால் உடம்பு ரணமாக வலித்தது. இன்று கொடியில் தோய்த்துக் காயப்போட்ட உடுப்பை எடுத்து வைக்கவில்லை என்றுதானே அடித்தான். இது ஒரு பெரிய விசயமே இல்லையே. மனதிற்குள் எதையோ வைத்து பழிவாங்குகிறான் என்ற எண்மை மட்டும் அவளுக்கு உறுதியாகத் தெரிந்தது அழுதழுது சோர்ந்துபோனாள் திவ்வியராணி.



அலாரம் அடித்து ஆறுமணியை நினைவூட்டியது. அவள் எழும்பநினைத்தாலும் எழும்பமுடியவில்லை. ஆனால் அவன் வந்தானென்றால் மீண்டும் ஒரு புயல் வீசும் அல்லவா? இன்றும் அவள் அடிதாங்காமல் மயங்கிவிழுந்ததனால்தானே அவன் அடிப்பதை நிறுத்தினான். அல்லது இன்னமும் ஓயாத அலைகாளகவே இருந்திருக்கும் அவனைப்பொறு த்தவரைக்கும் அவள் மயங்கி விழுந்தாலோ அல்லது அவளது உடலிருந்து ரத்தம் வழிந்தாலோ அல்லது அ வளது உடுப்பு கிழிந்தாலோ தவிர அதுவரை அவனது ஆத்திரம் அடங்குவதில்லையே. இப்போது அவன் வரும் நேரம். ஏன் விளக்கேற்றவில்லை என்ற சாட்டை வைத்து அடிப்பான். அதனால் உடல்வலியைப் பாராமல் எழுந்தாள்.

கல்வீடும் கரண்டுமாக வாழ்ந்தவள் இப்போ ஓலைக்குடிசையும் குப்பிவிளக்குமாகக் குடம்பம் நடத்திக் கொண்டிருந்தாள். தூரத்தில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்கிறது. வருகிற வேகத்திலேயே வெறியில்தான் வருகிறான் என்பது திவ்வியராணிக்குத் தெரிவாகிவிட்டது. விளக்குகளை ஏற்றி வைத்துவிட்டு வாசலில் வச்துநின்றாள். ஆவலோடு கணவனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பெண்கள் மத்தியில் என்ன நடக்குமோ என்று பயத்திலும் கவலையிலும் நிற்கும் திவ்வியராணியின் நிலை பரிதாபகரமானது தான். எனினும் அவளும் அவனுக்காகக் காத்துநின்றாள்.

மோட்டார் சைக்கிளை கொண்டு வந்து முற்றத்தில் நிறுத்திய அசோக் என்னடி உன் காதலனையா பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? என்று கேட்டபடியே பற்களை நெருமிக் கொண்டு வந்தான். திவ்வியராணிக்கு அழுகையும் ஆத்தரமும் அசோக்கின் சேட்கொலரைப் பிடித்து நீயும் ஒரு மனிசனா என்று கேட்கத் தோன்றியது அவளுக்கு ஆனால் நாகாக்க என்ற வள்ளுவரின் வாக்கு நினைவுக்கு வந்து நின்றது. அவள் வள்ளுவர் இல்லைத்தான் இருந்தும் வள்ளுவரின் வாக்கைக் கடைப்பிடிக்க வேண்டி கட்டாயம் இருந்தது. அதனால் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்துகொண்டிருந்தாள்.


> **“என்னடி உன் காதலனையா பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? என்று கேட்டபடியே பற்களை நெருமிக் கொண்டு வந்தான். திவ்வியராணிக்கு அழுகையும் ஆத்திரமும் அசோக்கின் சேட்கொலரைப் பிடித்து நீயும் ஒரு மனிசனா என்று கேட்கத் தோன்றியது”**

அவளைப் பொறுத்த வரைக்கும் அவன் வேண்டாத கணவன்தான் அவள் அவளைக் காதலித்ததுகூட இல்லையே கல்யாணம் பண்ணும் ஐடியாவே இல்லாத அவளை இரண்டுமாதங்களாக பின்னால் சுற்றி கட்டாயப்படுத்தி கடத்திவந்தவன்தானே அவன் தொன்னூறு மைல்களுக்கு அப்பால் கொண்டு வந்து இப்போது தொட்டாலும் குற்றம் பட்டாலும் குற்றம் என்று துரத்தி துரத்தி அடிப்பது எந்த வகையில் நியாயம்? நீயில்லை என்றால் நான் செத்திடுவேன் என்று கடைசிநேரத்தில்

தொடரும்...

பிரியநிலா
ஓமந்தை

# முயன்றால் முடியும்! 14




**இடமிருந்து வலம்**

1.உயிர் வாழ அவசியமானது
2.உலோகம், பாம்பின் ஒரு இனம்
3.நீரிலும் வாழும் நிலத்திலும் வாழும் (குழம்பியுள்ளது)
4.வினா
5.வாத்தியங்களில் ஒன்று (திரும்பியுள்ளது)
8. காட்டுவாசிகளின் தொழில்
9.சண்டைக்குப் பிந்தினாலும் இதற்கு முந்தவேண்டும்
10.கத்தியைத் தீட்டுவதைவிட இதனைத்தீட்டுதல் நன்று (குழம்பியுள்ளது)
13.திருமணக்கிரியையில் மணமக்களுக்கு காட்டப்படும் நட்சத்திரம் (குழம்பியுள்ளது)
14. யானைக்குச் சிலசமயம் பிடிக்கும், மனிதரையும் இது பிரிக்கும்
16. பாரம், சுமை (திரும்பியுள்ளது)
17.ஐவகை நிலங்களில் ஒன்று (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**


1.அன்பின் உச்சநிலை
2.பழைய நகைச்சுவை நடிகர்
05.தெரியாமல் செய்வது (திரும்பியுள்ளது)
6.மழைக்கும் வெய்யிலுக்கும் உதவுவது
7.நரிக்கு உள்ள இந்தக்குணம் சிலமனிதர்களுக்கும் உண்டு
9.மனிதர்களுக்குள் இருக்கும் உறவுப்பிணைப்பு (குழம்பியுள்ளது)
11.பொன்நகையை விடச் சிறந்த நகை
12.பெண்கள் நெற்றியில் இடுவது
15.மேல் நாட்டுக் குடிவகை ஒன்று

விடைகளை மேலுள்ள கூப்பனில் எழுதி, கத்தரித்து எங்களுக்கு அனுப்பிவையுங்கள். முற்றிலும் சரியான விடைகளை எழுதுபவர்களில், குலுக்கல் மூலம் தெரிவாகும் முதல் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 500/-, 300/-, 200/- வழங்கப்படும்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ரு | ள் | மொ | ழி | வ | ர் | ம | ன் | | பு |
| றி | | | | | ஞ் | | ஞ் | | கீ | தை |
| வி | த | வை | | | ச | | ச | | | ய |
| ய | | | நி | ற | ப் | பி | ரி | கை | | ல் |
| ல் | | | ர் | | பு | | | க் | | |
| | தி | ரு | வா | ச | க | ம் | | கி | | க |
| தி | ரு | | க | | ழ் | | க | ளை | | ன் |
| | க் | | ம் | | ச் | | | | | னி |
| வெ | கு | ளி | | | சி | வி | ங் | கி | | த் |
| | ற | | | | | | | ழ | | தீ |
| வெ | ள் | ள | ம் | | ரா | ம | ன் | வி | ளை | வு |

சென்ற மாதத்திற்கான சரியான பதிலை எழுதியவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்ட 3 அதிஷ்டசாலிகள் பணப்பரிசை பெறுகின்றார்கள்

- **500/-** சுகுமார் – சின்னப்புதுக்குளம், வவுனியா.
- **300/-** ரேகா–உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி.
- **200/-** சுமதி – வெளிக்குளம், வவுனியா.



## இவ்வளவு கூட்டமாக கப்பலில் எங்க போறாங்க யார் இவங்க?

இந்த கப்பலில் உள்ளவர்கள் அனைவரும் அமெரிக்க இராணுவத்தினர்கள், ஜெர்மனியை போரில் வென்றுவிட்டு அமெரிக்கா திரும்புகையில் எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது. வி–டே என அழைக்கப்பட்ட நாள் அது 1945ம் ஆண்டு ஆகும்.

# என் உயிர்ப் பாடல்

படம் : கண்ணால் பேசவா
இசை : தேவா
பாடலாசிரியர்: வைரமுத்து
பாடியவர் : சுஜாதா

## நெஞ்சுக்குள்ள துடிக்கிற .....




நெஞ்சுக்குள்ள துடிக்கிற
இதயத்த விட்டுவிட்டு
மூச்சுப்போகுதே
ஒரு வழி தெரியாமல்
தேடுதையா அந்த
மூச்சுக்காற்றையே (2)

வானம் அங்கிருக்க
வெண்வாண்மதி
இங்கிருக்க
ரெண்டும் விலகிட
வாழ்ந்திடுமா
ஒரு வழி சொல்லு கைபிடிக்க

(நெஞ்சுக்குள்ள....)

அலங்கரிச்ச தேர்போல ஊர்வலமா வந்தாளே
சக்கரங்கள் உடைந்துபோக வீதியிலே நின்னாளே
நந்தவனம் அழகைப்போல நாளெல்லாம் பூத்தாளே
ஈரம்தான் காய்ந்துபோக பாலைவனம் ஆனாளே
ஏங்கும் காதல் சேர விதி வாசல் திறக்கலையே
கொங்கு மூக்கைப்போல என் காதல் வத்தலையே
கண்ணிரண்டில் ஒன்னுதான் தெரியுதா
கருவண்டு கண்ணையே குடையுதா
செம்பருத்தி இதழா விதியா
தென்மருத்தி காணாத வலியா

(நெஞ்சுக்குள்ள....)

ஆசை என்னும் மண்ணிலதான் காதல் விதை விதைத்தாளே
முள்ளுச்செடி முளைச்சுப்போனால் நெஞ்சுக்குள்ளே
குத்திடுமோ
வானலவு ஆசை வச்சேன் கடுகளவு ஆகிடுமா
கடலளவு நேசம் வச்சேன் சிறுதுளியாய் மாறிடுமா
நான் வாங்கும் மூச்சே உன்பேச்சில் கேட்காதா
ரத்தம் எல்லாம் கொதிச்சே உன்பேரை சொல்லுதே
பூவெல்லாம் பூக்காத பூமியா
வான்மழை பெய்யாத மேகமா
முத்தெல்லாம் விளையாத சிற்பியா
நட்சத்திரம் பூக்காத வானமா

(நெஞ்சுக்குள்ள....)

இந்தப்பாடல் மிகவும் எனக்குப் பிடிக்கும் கணவருக்கு தன் இதயத்தை கொடுத்து காப்பாற்றுவதற்காக பாடிய பாடல் மிகவும் இனிமையானது இதனை நான் மிகவும் இனிமையுடன் கேட்பேன்.

**உ.செந்து**
இல:467, கரியாலை நாகபடுவான்
முழங்காவில்.

# உங்கள் ராசிக்கு காதல் உறவுகள் எவ்வகையில் அமையும்



## கன்னி

கன்னி ராசி உள்ளவர்கள் அன்பு மட்டும் இல்லாமல் கடமை உணர்வும் கொண்டவர். காதலையும், அன்பையும் யோசித்து செயல்படுபவர். காதலையும், அன்பையும் உடலால் இல்லாமல் மனதளவில் நினைப்பவர். இவர்கள் கொடுக்கல், வாங்கல் விஷயத்தில் விருப்பமுடையவர்கள். இந்த ராசி இருப்பவர்கள் நல்ல குனம் உடையவர்கள். ஆனால் இந்த குணம் உடையவர் லட்சியத்தை கடைபிடிக்க மாட்டார்கள். இவர்களுக்கு அன்பு சந்தோஷத்தை கொடுக்கிறது. கன்னி ராசி உள்ளவர்கள் மற்றவர்களை சந்தோஷமாக வைத்திருப்பதில் சந்தோஷமடைவர். விருச்சிக ராசியுடையவர்களோடு மனதளவிலும், மகர ராசி உடையவர்களோடு உடலளவிலும் கவரக் கூடியவர்கள். அவர்களுடைய முயற்சி வெற்றியை கொடுக்கும்.



# Face Book ல்
# சிங்கத்திடம் சிக்கியது மான்.

பெண் என்பவள் பொறுமையில் பூமிக்கு ஒப்பானவள். பூமியானது உலகத்திலுள்ள நல்லவர்களையும் தாங்குகின்றது. கெட்டவர்களையும் தாங்குகின்றது. அதே போன்றுதான் பெண்ணும் எல்லாவற்றையும் தாங்கி பொறுமையோடு தன் வாழ்வை நகர்த்துகிறாள். இதனை சில ஆண்கள் சீண்டியும் பார்க்க சிந்திக்கிறார்கள். சிந்திப்பது மட்டுமா? சின்னாபின்னமாக்குகிறார்கள். ஆனுக்கு சரிநிகரான பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியவள் பெண். ஆனால் அன்பிற்கு கட்டுப்பட்டவள் ஆகின்றாள். ஆண் என்பவன் தன் ஆளுமையை ஆயுதமாகக் கொண்டு பந்தாடுகின்றான்.

அது மட்டுமல்லாமல் தொழிநுட்பம் ஓகோ! என்று வளர்ச்சியடைந்த காலம். அதிலும் எவ்வளவு நன்மைகள் மட்டுமன்றி தீமைகளும் காணப்படுகின்றன. இத் தொழிநுட்பத்தில் வளர்ச்சியடைந்தவையே பல வலைத்தளங்கள். வலைத்தளங்களால் எவ்வளவோ நன்மைகள் உண்டு. ஆனால் எம்மவர் அதனைப் பலவழிகளில் சேதப்படுத்துகிறார்கள். வலைத் தளங்களில் உலகை இப்பொழுது ஆட்டிப்படைக்கும் ஒன்றாக முகஅட்டைக் (Face Book) காணப்படுகின்றது.

பெண்களும்சரி ஆண்களும்சரி மூன்று வேளை உணவு உண்கிறார்களோ இல்லையோ முகஅட்டையைப் (Face Book) பார்வையிடுகிறார்கள். இந்த ஒரு வலைத்தளத்தின் மூலம் சில காமுகர்கள் பெண்களை தம் இச்சைக்காக பயன்படுத்துகிறார்கள். பெண்களும் அவர்கள் ஆசை வார்த்தையை நம்பி அவர்கள் போடுவது நாடகம் என்றும் தெரியாமல் மாட்டிக்கொள்கின்றார்கள். அவ்வாறு மாட்டிக் கொண்டவள் தான் கவி என்பவள்.

கவி ஒரு சிறந்த அழகான நங்கை. அவளிற்கு தாய், தந்தை, இரண்டு தங்கைகளும் உண்டு. அன்பான குடும்பம் மிகச் சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள். இவர்களின் குடும்பம் ஒரு நடுத்தர குடும்பம் ஆகும். இவள் படிப்பில் மிகச் சிறந்து விளங்கினாள். சித்திரமும் மிகச் சிறப்பாக வரைவாள். கவி எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகுவாள். இவ்வாறு அன்பு என்றப் போர்வையை பொருட்டாக வைத்து இளவயதிலிருந்து இவளோடு சிரித்துப்பேசி விளையாடித் திரிந்தவன் தான் நிஷாந்.

கவி, நிஷாந் இருவரும் நல்ல நெருங்கிய நண்பர்களாக இருந்தனர். சிறிது காலம் போக இருவரும் பிரிந்து விட்டனர். பின்பு கவி தனியார் கல்வி செல்லும் பாதையில் தான் அவன் வீடு இருந்தது. சில வேளைகள் படித்து விட்டு வீடு திரும்பும் வேளையில் அவனைக் காண்பாள். ஓரிரு வார்த்தைகள் கதைத்து விட்டு வந்து விடுவாள். இவ்வாறு இருந்த இருவரின் நட்பும் இரண்டு வருடங்களில் முடிந்தது.

இருவரும் கா.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றினர். பரீட்சை எப்படி? என்று கலந்துரையாடிவிட்டு இருவரும் சந்திக்கவும் இல்லை, கதைக்கவும் இல்லை. இருந்தும் கவி நிஷாந் குடும்பத்தின் மீது நல்ல மரியாதை வைத்திருந்தாள். கவியிடம் கணனி இருந்தது. ஒரு நாள் இவள் தன் முகஅட்டையை (Face Book) பார்வையிட சென்றாள். அப்போது தன் முகஅட்டைப் பக்கத்தில் புதிய நண்பர் ஒருவர் இணைந்திருந்தார். அந்த நபர் தனது பெயரை தெளிவாகக் குறிப்பிடவில்லை. கவியின் புகைப்படங்களுக்கு கீழே தனது கருத்துக்களையும் தாவிறக்கம் செய்திருந்தார். இதனால் கோபமுற்ற கவி குறுந் தகவல் மூலம்

கவி – யார் நீங்கள்?

நிஷாந் – என்ன என்னை மறந்துவிட்டியா? நான் உனக்கு தெரிந்தவர். என்றான்

கவி – உங்களை நான் எப்படி அறிந்து கொள்ள முடியும்? நீங்களே சொல்லுங்க.

நிஷாந் – நான் சொல்வது இருக்கட்டும். என் முகவட்டையில் (Face Book) புகைப்படங்களை பார்வையிட்டாயா?

கவி – இல்லை நான் பார்க்கவில்லை. மன்னிக்கவும். பிறகு பார்த்துவிட்டுக் கதைக்கிறேன். இப்ப கொஞ்சம் வேலையா இருக்கிறேன். Ok. Bye

(என்று அவள் கூறியதை அவன் பொருட்படுத்தவும் இல்லை தான் யாரென்று கூறவும் இல்லை. இவர்களின் இந்த உரையாடல் கூட ஒரு வருடத்திற்கு பிறகு நேர்ந்ததே.)

மீண்டும்.........

**செல்வநாயகம் கஜந்தினி**

சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா.

# மாணவர் அரங்கம்



தயாணி பரமலிங்கம்
மாணவர் இல: 01


சலோமி
மாணவர் இல: 02


சிபியா
மாணவர் இல: 03


பே.பானுயன்
மாணவர் இல: 04


ந.அபிதா
மாணவர் இல: 05


ற.அனோஜினி
மாணவர் இல: 06


கி.கலையரசி
மாணவர் இல: 07


க.கயலரசி
மாணவர் இல: 08



ஜீ.சான்சியா
மாணவர் இல: 09


ந.டேனுஜன்
மாணவர் இல: 10


உ.கணிமாறன்
மாணவர் இல: 11

## உங்கள் கை வண்ணங்கள்

மாதநிலா செல்வங்களே, நீங்கள் வரைந்த ஓவியங்களை எங்களுக்கு அனுப்பி வையுங்கள். தொடர்ந்து வரும் இதழ்களில் "உங்கள் கைவண்ணங்கள்" பகுதியில் பிரசுரிக்கப்படும்.



வி.உமாபரன்
கிளி/கரியாலை நாகபடுவான்
அ.த.க.பாடசாலை

**Job Bank**

வேலைவாய்ப்பு தருனர்களாக இருந்தாலும் சரி வேலைவாய்ப்பை பெறுபவர்களாக இருந்தாலும் சரி எங்களுடன் இணைந்து உங்கள் தேவைகளை நிவர்த்தி செய்வது தான் இந்த JOB BANK இன் சேவை.

## வேலைவாய்ப்பு

- வவுனியா சந்தை சுற்றுவட்ட வீதியில் அமைந்த டேவிட் மொபைல் நெற் நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. தொடர்புகளுக்கு:

**பதவி வெற்றிடம்** (வவுனியாவில்)

பிரபல தொழில்சார் கல்லூரிக்கு கணனி அறிவு மற்றும் ஆங்கில அறிவுடன் கூடிய

**நிர்வாக உத்தியோகத்தர் (பெண்)**

தேவை

சம்பளம் நேரில் பேசித் தீர்மாணிக்கப்படும்

077 9713221

**வியாபார நிறுவன உரிமையாளர்களே! உங்களுடைய தொழிலுக்குப் பொருத்தமான பணியாளர்களை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றீர்களா?**

**மாணவ மாணவியர்களே! படித்துவிட்டு உங்களுக்கு விருப்பமான வேலை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளீர்களா?**

**உடன் தொடர்பு கொண்டு எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்**

**எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது!**

அழையுங்கள் **077 900 94 91**

# சிதைந்த கனவுகள்

– சிறுகதை

■ கூடலூர் ச.அ.இராசநாயகம்

உருக்குலைந்து வெடிப்புகளோடு நாலா பக்கம் புதர்களோடு காணப்பட்ட சிறிய மண்டபமே இப்போது "பாய்ச்சல் பாலனின்" தங்குமிடமாக மாறி இருந்தது. வருடக்கணக்காக வெட்டப்படாத தலை மயிரும் முகச்சவரமும் தாடியாக நீண்டு வளர்ந்து குழி விழுந்த கண்கள் சோக ரேகைகள் இழையோடிய முகம், வயிற்றோடு ஒட்டிச் சுருங்கிய உடல்வாகு, பழைய அழுக்கு நிறைந்த சாரம், வெறுமையான மேலுடம்பை போர்த்துக் கொண்ட அழுக்கான துவாய் இதுதான் "பாய்ச்சல் பாலனின்" இப்போதைய தோற்றம். பாலன் பொதுவாகவே பணம் மட்டுமல்ல எந்த விடயத்திலும் பேராசை உடையவனாகவே இருந்து வந்தான். சாதாரணமாக அவன் நடப்பதில் கூட ஒரு வேகம் காணப்படும். இதனால அவனுடைய கிராமத்து இளைஞர்களால் சூட்டப்பட்ட "பாய்ச்சல்" என்ற சொல்தான் அவனுடைய சொந்தப்பெயரான பாலனோடு ஒட்டி பாய்ச்சல் பாலன் என்றால் தான் இன்னாரென்று தெரியும் அளவுக்கு அன்றும் இன்றும் பிரபலமாகி இருக்கின்றது.

> "அதிர்ச்சியில் இருந்து கஷ்டப்பட்டு மீண்ட பாலன் குழைந்து பேசினான். "முன்னுக்கு வாங்கோ. என்ன வேணும்" கடையில் இருவர் உதவிக்கு இருந்தாலும் பாலனே எழுந்து அவள் கேட்ட சாமான்களை நிறுத்துக் கொடுத்தான். பெற்றுக்கொண்ட அந்தப்புயல் செல்லமாய் "தாங்க்ஸ்" சொல்லிய படியே ஒய்யார நடை போட்டுச் சென்று மறைந்தது. கேள்விக்குறியோடு...."

தொழில் ஏதும் செய்கின்ற நேரம் தவிர மிகுதியான நேரங்கள் பகலானாலும் இரவானாலும் அந்தப் பேரூந்து நிலையம்தான் அவனுடைய தங்குமிடம். எந்தநேரமும் அவனது வாயில் பீடி ஒன்று எரிந்து புகைந்து கொண்டிருக்கும். தொழிலுக்கு அவன் நீண்டதூரம் செல்லத்தேவையில்லை. அந்தப் பழைய பஸ்தரிப்பிடத்திலிருந்து நேர் எதிரே கண்ணுக்கெட்டிய தூரத்திலே அமைந்திருந்தது அந்த மயானம். அங்கே புதைப்பதற்கு ஒரு பக்கமும் எரிப்பதற்கு ஒரு பக்கமும் ஒதுக்கப்பட்டிருந்தது. எனவே இரண்டு இடங்களிலும் பாய்ச்சல் பாலனுக்கு வேலை கிடைக்கும். சம்ளமாக பணமும் கிடைக்கும். குடிப்பதற்கு சாராயமும் கொடுப்பார்கள். இப்படியே அவனது வாழ்க்கை கழிந்து கொண்டிருந்தது. மனைவி அன்பரசியின் நினைவும் இரு பிள்ளைகளின் நினைவுகளும் அவனை மேலும் வாட்டி வதக்கின.



'பாலன் பல்பொருள் வாணிபம்' என்ற பாலனுடைய கடை ஒரு காலத்தில் அந்த ஊரில் மட்டுமல்ல அக்கம்பக்கத்து ஊர்களிலெல்லாம் பிரபல்யம்பெற்று விளங்கியது. போதுமான வருமானத்தை கொண்டிருந்ததினால் குடும்பத்திலும் மகிழ்ச்சி களை கட்டத்தொடங்கியது. அன்பரசி பாலனை மனதார விரும்பியிருக்க அது தெரிந்த பெற்றோர் பாலனுடைய பெற்றோரோடு கதைத்து இருவருக்கும் திருமணம் வைத்து இருந்தனர். ஒரு ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகள். அவர்கள் படித்துக்கொண்டிருந்தார்கள். அன்பரசி பிள்ளைகள் இருவர் மீதும் கணவன் மீதும் அபார பாசம் வைத்திருந்தாள். பாலனும் தனக்கு நல்லதொரு மனைவி கிடைத்த மகிழ்ச்சியில் மிதக்க மொத்தத்தில் அவர்களது குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் நிரம்பியிருந்தது.

'பாய்ச்சல் பாலன்' பெயருக்கேற்ற பெரும்

(தொடரும்...)

சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்

ரோகிணி, உத்தரம் 2ம், 3ம் பாதங்கள் அத்தம் சித்திரை 2ம் கால்கள், திருகோணம், அவிட்டம் 3ம் 4ம் பாதங்கள் சதயம் பூரட்டாதி 1,2,3ம் பாதங்கள் (இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து தான தருமங்கள் செய்க.

**சுபநாள் தை விஷேசம்**

**சித்திரை 01ம் நாள் (14.04.2014) திங்கட்கிழமை**

காலை 6.11 முதல் 7.31 மணி வரை
காலை 10.04 முதல் 12.03 மணிவரை
பகல் 2.22 முதல் 4.27 மணிவரை
இரவு 6.21 முதல் 7.21 மணி வரை
சித்திரை 03ம் நாள் 16.04.2014 புதன்கிழமை

**புதன்கிழமை**

காலை 6.04 முதல் 7.41 மணிவரை
காலை 7.49 முதல் 9.44 மணிவரை
பகல் 9.46 முதல் 11.54 மணிவரை
பகல் 2.14 முதல் 4.02 மணிவரை
இரவு 6.13 முதல் 8.00 மணிவரை

| இராசி | ஆதாயம் | விரயம் | பகல் |
|---|---|---|---|
| மேடம் | 5 | 11 | நஷ்டம் |
| இடபம் | 14 | 2 | அதிகலாபம் |
| மிதுனம் | 2 | 2 | சமசுகம் |
| கர்க்கடகம் | 2 | 8 | நஷ்டம் |
| சிங்கம் | 14 | 8 | லாபம் |
| கன்னி | 2 | 2 | சமசுகம் |
| துலாம் | 14 | 2 | அதிகலாபம் |
| விருச்சிகம் | 5 | 11 | நஷ்டம் |
| தனு | 8 | 2 | லாபம் |
| மகரம் | 11 | 11 | சமசுகம் |
| கும்பம் | 11 | 11 | சமசுகம் |
| மீனம் | 8 | 2 | லாபம் |
| **மொத்தம்** | **96** | **72** | **அக மலிவு நேர சுகம்** |

வேதாகம கிரியா சாகரம்
**சிவஸ்ரீ தியாக சத்திதர குருக்கள்**
வவுனியா – உக்குளாங்குளம்
அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சமேத சுந்தரேஸ்வரர் சுவாமி தேவஸ்தானம்







வவுனியா நகரில்
அன்றுமுதல் இன்றுவரை
எலெக்ரோனிக் பொருட்களின் அரசன்

# கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்கட்

மார்ச் மாதத்திற்குரிய பரிசுக்குவியல் பகுதியில் 1ம் பரிசைத் தட்டிச் சென்றவர் சுந்தரபுரம் வவுனியாவைச் சேர்ந்த **ஜீ.லக்சிகா**

2ம் பரிசுக்குச் சொந்தக்காரர் இரணைமாதாநகர் முழங்காவிலைச்சேர்ந்த **றொ.மரியாள்**

3ம் பரிசைப் பெற்றவர் 2ம் கட்டை வேப்பங்குளம் வவுனியாவைச் சேர்ந்த **சு.கிரிசாந்தி**

## அறிந்ததும் அறியாததும்

குவாரின் என்ற பறவை மல்லாந்து தூங்குமாம்.

கங்காருவும் கைகளால் சண்டை போடும்

யானையும் குறட்டை விட்டுத் தூங்கும்

கொரில்லாவிற்கு 32 பற்கள் உண்டு

பெங்குயின் பறவை நடந்து செல்லும்

குரங்கு பேன் பார்க்கும்

குக்குபெர்ரா பறவை சிரிக்கும்

உகாரி குரங்கு கைகளைக் கட்டிக்கொண்டு நடக்கும்

சிங்கம் குடும்பம் குடும்பமாய் சேர்ந்து வாழும்.

நியூசிலாந்து நாட்டில் காக்கைகள் கிடையாது.

வெட்டுக் கிளியை வேட்டையாடும் பறவை மைனா.

நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.

# விமான கறுப்புப்பெட்டி என்றால் என்ன?

கறுப்பு பெட்டி ( Black box )என்பது கறுப்பு நிறத்தில் இருப்பதில்லை . விமான தரவு பதிவி(Flight data recorder(FDR)/Accident Data Recorder (ADR)) என்பது விமானத்தின் செயல்களையும் மற்றும் விமானம் பறக்கும்பொழுது விமானம் மற்றும் அதை சுற்றியுருக்கும் சூழலின் குணாதிசயங்களாகிய வேகம், பறக்கும் உயரம், வெப்பநிலை, காற்றழுத்தம் போன்ற 400க்கும் மேற்பட்ட குணாதிசயங்களை கணித்து அதை பதிவு செய்து வைத்துக்கொள்ளும் கருவியாகும்.

இக்கருவி விமானத்தின் கறுப்புப் பெட்டிக்குள் இருக்கும். இரு பகுதிகளைக் கொண்ட கறுப்புப் பெட்டிக்குள், ஒன்று விமானியறை குரல் பதிவி (Cockpit voice recorder ) மற்றொரு பகுதி விமான தரவு பதிவி ஆகும் (Flight data recorder ). கறுப்புப் பெட்டி விமானத்தின் வால் பகுதியில் இது பொருத்தப்பட்டிருக்கும். விமானம் விபத்துக்குள்ளானால் அதிலிருந்து தொடர்ந்து சமிக்ஞைகள் வந்து கொண்டிருக்கும். கிட்டத்தட்ட 30 நாட்கள் வரை இந்த சமிக்ஞைகள் வரும், இந்த சமிக்ஞைகளை வைத்து இதன் இருப்பிடத்தை அறிந்து கொள்ளமுடியம். இதில் பதிவாகியுள்ள தரவுகளை வைத்து விமான விபத்திற்கான காரணங்களை அறிந்து கொள்ளமுடியும்.

கறுப்பு பெட்டியை கண்டுபிடிப்பதன் மூலம் அந்த விமானம் விபத்துக்கு உள்ளான காரணத்தை கண்டறியலாம் என உறுதியாக சொல்லமுடியாது, சில சமயம் கறுப்பு பெட்டி சேதம் அடைவதாலும் வேறு சில காரணங்களாலும் கறுப்பு பெட்டியில் இருந்து பதிவுகள் மீட்கப்படாது போகலாம்.விமானம் பறந்து கொண்டு இருக்கும்போது விமானிக்கும், விமானக் கட்டுப்பாட்டு அறைக்கும் தொடர்ந்து தகவல் பரிமாற்றம் நடைபெறும்.அதேபோல், விமானத்துக்குள் விமானியும், துணை விமானியும் விமானத்தை இயக்குவது தொடர்பாக பேசிக் கொள்வார்கள்.
இவை அனைத்தும், 'காக்பிட்' எனப்படும் விமானி அறைக்குள் வைக்கப்பட்டுள்ள 'கறுப்பு பெட்டி'யில் பதிவாகும். பல ஆயிரம் அடி உயரத்தில் இருந்து விமானம் விழுந்து சுக்குநூறாக நொறுங்கினாலும், தீப்பிடித்து முழுவதும் கருகினாலும் அல்லது கடலில் பல மைல் ஆழத்தில் மூழ்கினாலும் கூட இந்த கறுப்பு பெட்டி மட்டும் பெரும்பாலும் சேதம் அடையாது. அவ்வளவு பாதுகாப்பான முறையில் இது தயாரிக்கப்படுகிறது.

விபத்துக்குள்ளான விமானம் குறித்து முழு விபரங்களையும் அறிவதற்கு உதவியாக இருப்பது கருப்புப் பெட்டியாகும். விமானத்தின் விவரங்கள் பதிவு சாதனம் ( யுவுசு ) என்பதே கருப்புப் பெட்டி என அழைக்கப் படுகிறது.




இந்த பெட்டியின்மீது பல அடுக்குகளாக எக்கு தகடுகள் சுற்றப்பட்டு இருக்கும். அதனால், விமானம் மோதினாலோ, தீ பிடித்தாலோ, தட்ப வெட்ப நிலையில் அதிகபட்ச்ச மாற்றம் ஏற்பட்டாலோ எந்த பாதிப்பும் கறுப்புப் பெட்டிக்கு ஏற்படாது. மேலும் எத்தகைய விபத்து ஏற்பட்டாலும் பாதுகாப்பான பகுதியாக கருதப்படும் விமானத்தின் வால் பகுதியில் இந்த பெட்டி பொருத்தப்பட்டு இருக்கும். இவ்வளவு பாதுகாப்பான பகுதியில் அமைந்துள்ள கறுப்பு பெட்டியில் விமானம் பறந்த உயரம், வேகம், நேர்குத்து இயக்கம், விமானத்தின் இடம் என விமானத்தை பற்றிய உண்மையான நிலவரங்கள் பதிவாகிக் கொண்டு இருக்கும். எனவே விபத்து நடந்த போது நிலவிய சூழ்நிலையை தெளிவாக அறிந்து கொள்ள முடியும். இதுதவிர கறுப்புப் பெட்டியின் மற்றொரு பிரிவில் ஒலிப் பதிவு கருவியும் உண்டு. விமானத்தில் உள்ள பைலட்டுகள் அறையில் நடந்த உரையாடல், அங்கு ஏற்படும் ஒலிகள், பைலட்டுகளின் குரல்கள், எஞ்ஜினின் இரைச்சல் என அனைத்துவித சப்தங்களும்

அதில் பதிவாகிவிடும். இதன் மூலமாக விபத்து நடந்த போது பரிமாறப் பட்ட தகவல்களை தெரிந்து கொள்ளலாம்.
'கறுப்பு பெட்டி' கறுப்பு நிறமாக இருக்காது. எளிதாக கண்டுபிடிக்கும் வகையில் ஆரஞ்சு நிறத்தில்இருக்கும்.

ஒரு விமானத்தில் சிறியது, பெரியது என 2 கறுப்பு பெட்டிகள் இருக்கும்.

பெரிய கறுப்பு பெட்டிக்கு 'பிளைட் டேட்டா ரிக்கார்டர்' என்று பெயர். விமானம் பறக்கும் உயரம், வேகம், நேரம் போன்ற விவரங்களை இது பதிவு செய்யும்.
சிறிய கறுப்பு பெட்டிக்கு 'வாய்ஸ் ரிக்கார்டர்' என்று பெயர். விமானியின் அறையில் நடக்கும் உரையாடல்கள் மற்றும் அங்கு ஏற்படும் மற்ற சத்தங்கள் இதில் பதிவாகும்.
விபத்து நேர்ந்தால் அதிகம் பாதிக்காத வகையில், 2 பெட்டிகளும் வால் பகுதியில்தான் வைக்கப்பட்டு இருக்கும்.
இரண்டு கறுப்பு பெட்டிகளும் 25 மணி நேரம் நடைபெறும் சம்பவங்கள், உரையாடலை பதிவு செய்யும்.
2012 பாரன்ஹீட் வெப்பத்தையும் தாங்கும்.
1000 டன் இரும்பு பாளத்தை போட்டாலும் நசுங்காது.
கடலில் பல மைல் ஆழத்தில் விழுந்தாலும் பாதிக்காது.




Image: Getty


விசாரணையில் டேவிட் வாரனும் ஈடுபட்டு உதவினார். அப்போதுதான் இதுபோன்ற விமான விபத்துகளைக் கண்டறியும் ஒரு கருவியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற முடிவுக்கு அவர் வந்தார். அதன் பின், 1956ல் அவர் கறுப்புப் பெட்டியைக் கண்டுபிடித்து வெளியுலகுக்கு அறிவித்தார். இருப்பினும் அவரது கண்டுபிடிப்பின் முழுப் பரிமாணம் மற்றும் பயனை உணர்ந்து அதை விமானங்களில் பொருத்த மேலும் ஐந்தாண்டுகள் தேவைப்பட்டன. அவரது கண்டுபிடிப்பு, உலக விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பான பயணத்துக்கு ஒப்பற்ற பங்காக கருதப்படுகிறது.

விமானத்தில் கருப்புப் பெட்டி பொருத்துவதை முதன் முதலில் கட்டாயமாக்கியது ஆஸ்திரேலியாதான். 1960 ம் ஆண்டில் அது அமலுக்கு வந்தது. கறுப்புப் பெட்டி என அழைத்தாலும் அதன் உண்மையான நிறம் ஆரஞ்சு என்பது குறிப்பிடத்தக்கது. விபத்துக்கு பிறகு எளிதாக அடையாளம் காண்பதற்காக அந்த பெட்டியின் மீது சிவப்பு அல்லது ஆரஞ்சு நிறத்தில் பெயின்ட் அடிக்கிறார்கள்.

2009 ஆம் ஆண்டு பிரேசில் நாட்டின் ரியோ டி ஜனேரோ நகரிலிருந்து பிரான்சு நாட்டு தலைநகர் பாரிஸ் சென்று கொண்டிருந்த Air France Af 447 விமானம் அட்லாண்டிக் பெருங்கடலில் விழுந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த அனைவரும் (216 பதினாறு பயணிகள், 12 விமான ஊழியர்கள்) பலியானார்கள். விமானம் விபத்துக்கு உள்ளான ஐந்தாவது நாளே விமானம் விபத்துக்கு உள்ளன விமானம் கண்டுபிடிக்கப்பட போதும் அதன் கறுப்பு பெட்டி ( Black box ) இரண்டு வருடங்களின் பின்னரே கண்டு பிடிக்கப்பட்டு அதன் பின்னரே விபத்துக்குள்ளான காரணமும் கண்டறியப்பட்டது.

இதன் பேட்டரிகள் 6 ஆண்டுகள் செயல்படும்.
பெட்டியில் இருந்து தொடர்ந்து 'பீப்' ஒலி வந்து கொண்டே இருக்கும். விபத்து நடந்த இடத்தில் இருந்து பெட்டியை எளிதாக கண்டுபிடிக்க இது உதவுகிறது.
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேவிட் வாரனின் அப்பா, ஆஸ்திரேலிய விமான ஆராய்ச்சி ஆய்வகத்தில் ஆய்வு விஞ்ஞானியாக பணிபுரிந்தவர். 1934ல் ஒரு விமான விபத்தில் பலியானார். கடந்த 1953ல் "காமெட்' என்ற ஜெட் விமானம் விபத்துக்குள்ளான போது, அது பற்றிய

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதாலேயே விபத்து நடந்த உடனேயே, விமானத்தின் கறுப்புப் பெட்டியை தீவிரமாக தேடுகின்றனர். மேலும், சாலை விபத்துகளைக் கண்டறிவதற்குக் கூட, வாகனங்களில் அப்பெட்டி பொருத்தப்படுகிறது.





# சுவிற்சர்லாந்து பற்றி


















மத்திய ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்த நாடுகளின் மத்தியில் உள்ளது.
ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் என்றழைக்கப்படுகிறது.
சுவிஸ் கைக்கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள் உலகப் புகழ் பெற்றவை.
தலைநகரம்: பெர்ன் (Bern)
மொழிகள்: ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ரொமான்ஸ்ச்
பெரிய நகரங்கள்: சூரிச் (Zurich), ஜெனிவா, பெர்ன்
நாணயம்: சுவிஸ் ∴பிராங்க் (Swiss Franc)
Federal Chancellor: கொரினா கசனோவா (Corina Casanova)
முக்கிய ஆறுகள்: ∴ரைன், ரோன், டிசினோ உலக முதலீட்டாளர்களுக்கு மிகப் பாதுகாப்பான நாடு.
அய்ரோப்பியக் கடைசிப் பனிக்காலத்திற்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இங்கு வாழ்ந்து வந்த ஹெல்வீஷியர் (Helvetian) ரீஷியர் ஆகிய இனத்தினரை ரோமானியர் கி.பி.முதல் நூற்றாண்டில் வென்றது முதல் இந்நாட்டின் வரலாற்றுக் காலம் தொடங்குகிறது. 5ஆம் நூற்றண்டில் டியூட்டானியர் இந்நாட்டை வென்றனர். 7ஆம் நூற்றாண்டில் பிராங்க் அரசுடன் சேர்க்கப்பட்டு கிறித்தவ சமயம் நிலைபெற்றது. 1291 முதல் நிரந்தரக் காப்புச் சங்கம் தோன்றியது. 1648இல் நிறைவேறிய West Phalயை உடன்படிக்கையின்படி விடுதலை பெற்றது.
1848 இல் புதிய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. 1515க்குப் பின் நடைபெற்ற முதல் உலகப் போர், இரண்டாம் உலகப்

போர் எதிலும் கலந்துகொள்ளவில்லை. எந்த நாட்டிற்கும் ஆதரவும் கொடுக்கவில்லை. ஐரோப்பிய யூனியனில் நடுநிலை வகித்த ஒரே நாடு என்ற பெயரினை உடையது.

ஐ.நா. சபையின் உறுப்பினராக 2002இல்தான் சேர்க்கப்பட்டது அதற்கு முன்பே ஐ.நா. அமைப்புகளான சர்வதேச தொழிலாளர் நிறுவனம், உலக சுகாதார நிறுவனம், சர்வதேச தபால் கழகம், சர்வதேச தகவல் தொடர்புக் கழகம், உலக வணிக அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross) உள்ளிட்ட பல அமைப்புகளின் தலைமையகங்கள் ஜெனிவாவில் உள்ளன.

பெண்களுக்கு வாக்குரிமை 1992இல் கொடுக்கப்பட்டது. இங்குள்ள வங்கிகளில் கணக்கு வைத்திருப்பவர்களின் பெயர்கள் பாதுகாக்கப்படுவதால் உலகம் முழுவதும் உள்ள கோடீஸ்வரர்கள் சுவிஸ் வங்கியில் பணம் போட்டுள்ளனர். அண்மையில் இந்த ரகசிய வங்கிக் கணக்கு முறை அகற்றப்பட்டது. எல்லாச் சட்டங்களும், உடன்படிக்கைகளும் பொதுமக்களின் வாக்கெடுப்பு முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன. நாட்டின் பெரும்பகுதி மலைப்பாங்கான பகுதியாக இருப்பினும் போக்குவரத்து ஓரளவு நல்லமுறையில் உள்ளது.

சுவிட்சர்லாந்தில் அதிபர் கிடையாது. Federal Council என அழைக்கப்படும் எழுவர் குழுவால் ஆளப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் அவர்களுள் ஒருவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

புவியியல் அமைப்பு:
வடக்கில் ஜெர்மனி, மேற்கில் பிரான்ஸ், தெற்கில் இத்தாலி, கிழக்கில் ஆஸ்திரியா எல்லைகளாக அமைந்துள்ளன.

இயற்கையமைப்பு: 1. வடமேற்கில் உள்ள ஜீரா மலைத்தொடர், 2. மத்திய சுவிட்சர்லாந்து பீடபூமி, 3. தெற்கே ஆல்ப்ஸ் மலைத்தொடர் என 3 பிரிவுகளாக உள்ளது.

வேளாண்மை: நாட்டின் நிலப்பரப்பில் 25 சதவிகிதம் காடுகள் இருப்பினும், 10 சதவிகித விவசாயமே நடைபெறுகிறது. கோதுமை, பார்லி, ஓட்ஸ், பழங்கள், உருளைக்கிழங்கு முதலியன விளைகின்றன.

கல்வி: பொது மற்றும் தனியார் பள்ளிகள் இருந்தாலும் சர்வதேச பள்ளிகளே அதிகம் உள்ளன. ஆரம்பக் கல்வி 6 வயதில் தொடங்கினாலும் பெரும்பாலான கேன்டன்ஸ் பள்ளிகளில் 4, 5 வயதிலும் குழந்தைகள் சேர்க்கப்படுகின்றனர்.

12 பல்கலைக்கழகங்கள் உள்ளன. முதல் பல்கலைக்கழகம் Basel என்னுமிடத்தில் 1460இல் தொடங்கப்பட்டுள்ளது. University of Zurich பெரியது.

சுற்றுலாத் தளங்கள்: ஜெனிவா, லுசெர்னி (Lucerne), சுரிச் (Zurich), இன்டர்லேகன் (Interlaken), ஆல்ப்ஸ் மலைச் சிகரங்கள், ரிஜி மற்றும் ஸ்டென்செர்கான் மலைத்தொடர்கள், அருங்காட்சியகங்கள்.

கடந்த 21.03.2014ல் வவுனியா வைரவப்புளியங்குளம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வவுனியா சிகை அலங்கரிப்பாளர் கூட்டுறவு சங்கத்தினால் நடாத்தப்பட்ட 2ம் கட்ட சீருடை வழங்கும் நிகழ்வில் “மாதநிலா” சஞ்சிகையின் மாவட்ட விற்பனை பிரதிநிதி திருமதி.சிவராணி அவர்கள் மங்கள விளக்கேற்றி உரை பாற்றுவதையும் செயலாளர் ச.அன்ரன் இராசநாயகம் தலைமை தாங்குவதையும் சங்க ஆலோசகர் திரு.அருள் (சட்டத்தரணி) உரை பாற்றுவதையும் படத்தில் காணலாம்.








# கவிதை மழை

கவிதைக்கு களம் அமைத்து தரும்
கவிதை மழையில் உங்கள் கவிதையும்
நனைந்திடலாம் வழமையான
உங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

## அநாதைக்குப்பை

காணிக்கு உரிமை கோருவோர் பலபேர்
பொது இடங்களில் கிடக்கும்
காணிகளுக்கு உரிமைகோருவோர் சிலபேர்
ஆனால் பொது இடங்களில் கிடக்கும்
குப்பைகளுக்கு உரிமைகோருவோர் யார்?

பொன். தங்கராசா
குட்செட் வீதி, வவுனியா.



அன்பே இல்லாத
உன்னிடம்
அன்பைத் தேடினேன்
இரக்கமே இல்லாத
உன்னிடம்
இரக்கத்தை தேடினேன்
மனிதாபிமானமே இல்லாத
உன்னிடம்
மனிதாபிமானத்தைத் தேடினேன்
மனசாட்சியே இல்லாத
உன்னிடம்
மனசாட்சியைத் தேடினேன்
இதயமே இல்லாத
உன்னிடம்
நான் இனி எதைத்
தேடுவேன்?

பிரியநிலா
ஒமந்தை

## காதலும் கண்ணீரும்...


காதல் எனும் பூ ஒன்று மலர்ந்தது எனக்குள்
கண்ணே இரண்டுமே விழித்துக் கொண்டன
இரவுகள் விடிந்தும் அறியாத கனவுகள்
எனக்குள்ளே ஓர் இனம் புரியாத உணர்வுகள்...

என் மதியிலே ஓர் மயக்கம்
விழிகளில் தெரியாத தயக்கம்
கண்தேடும் போதும் என் முன்னே நீயே
கற்பனையிலே வருவதும் நீயே...

என் வாழ்வில் நீயும் வந்ததேனோ
உயிரோடு சேர்ந்ததேனோ
வாழ்நாளில் தினமும் வழியுண்டு உனக்கு
வெறிகொண்டு நீயும் எழுந்திடுவாயோ

கனவுகள் வாழ்வென்று கலங்கிடாதே
நனவாக்க நீயும் முயற்சிப்பாயே
ஒளி கொண்டு நாளை இருள் நீக்கும் வேளை
கண்ணீர் துளியினைத் துடைத்திடுவாயே...

கவரிமான்
எஸ்.சிவராஜன்
வவுனியா.



# விளையாட்டுச் சங்கதி

ஐ.பி.எல் 7வது சீசனுக்கான 'ஆன் லைன்' டிக்கெட் விற்பனையின் முதல் பகுதி இன்று தொடங்கவிருக்கிறது.

www.iplt20.com இணையதளம் மூலம் 'ஆன்லைன்' டிக்கெட் முன்பதிவு செய்யலாம். பொது தேர்தல் காரணமாக இருகட்டமாக நடக்கவிருக்கும் டிக்கெட் விற்பனையின் முதற்கட்டம் நாளையும், அதன் அடுத்தகட்ட விற்பனை தேர்தல் முடிந்தும் தொடங்கவுள்ளது.

அபுதாபி, துபாய் மற்றும் ஷார்ஜா ஆகிய இடங்களில் லூலு பேரங்காடிகளில் டிக்கெட்கள் ஏப்ரல் 6ம் திகதி முதல் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிக்கெட்டின் விலையானது இடத்திற்கு ஏற்றவாறு மாறுபடுகிறது அபுதாபியில் நடைபெறும் ஒரு ஆட்டத்துக்கான குறைந்தபட்ச டிக்கெட் விலை ரூ.325 மற்றும் ஒரே நாளில் நடைபெறும் இரண்டு ஆட்டங்களுக்கு ரூ.490 கட்டணமாகும்.

துபாயில் நடைபெறும் ஒரு ஆட்டத்துக்கான குறைந்தபட்ச டிக்கெட்டின் விலை ரூ.490 மற்றும் இரண்டு ஆட்டங்களுக்கு மொத்தம் ரூ.815 கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஷார்ஜாவில் நடைபெறும் ஒரு ஆட்டத்துக்கான குறைந்தபட்ச கட்டணம் ரூ.490 மற்றும் இரண்டு ஆட்டங்களுக்கு மொத்தம் ரூ.650 கட்டணமாகும்.

## அவுஸ்திரேலியா ஆறுதல் வெற்றி!

மிர்பூர்: வங்கதேசத்துக்கு எதிரான 'டுவெண்டி20' உலக கோப்பை தொடரின் லீக் போட்டியில் ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் ஆறுதல் வெற்றி பெற்றது. வங்கதேசத்தில் 'டுவெண்டி20' உலக கோப்பை தொடர் நடக்கிறது. மிர்பூரில் இன்று நடக்கும் 'பிரிவு2' லீக் போட்டியில் வங்கதேசம், ஆஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன. 'டாஸ்' வென்ற வங்கதேச அணி கேப்டன் முஷ்பிகுர் ரஹிம் 'பேட்டிங்' தேர்வு செய்தார்.வங்கதேச அணிக்கு தமிம் இக்பால் (5), அனாமுல் (0) அதிர்ச்சி தந்தனர். அரை சதம் கடந்த சாகிப் 66 ரன்களில் அவுட்டானார். முஷ்பிகுர் ரஹிம் 47 ரன்கள் எடுத்தார். நாசிர் 14 ரன்களில் திரும்பினார். வங்கதேச அணி 20 ஓவரில், 5 விக்கெட்டுக்கு 153 ரன்கள் எடுத்தது. ஆஸ்திரேலிய அணிக்கு பின்ச், வார்னர் ஜோடி சிறப்பான துவக்கம் தந்தது. அரை சதம் கடந்த பின்ச் 71 ரன்கள் எடுத்தார். வார்னர் (48) அரை சத வாய்ப்பை இழந்தார். மேக்ஸ்வெல் (5) சொதப்பினார். ஆஸ்திரேலிய அணி 17.3 ஓவரில், 3 விக்கெட்டுக்கு 158 ரன்கள் எடுத்து, வெற்றி பெற்றது. ஒயிட் (18), பெய்லி (11) அவுட்டாகாமல் இருந்தனர்.



ஏற்கனவே 3 போட்டியில் தோல்வியடைந்த ஆஸ்திரேலிய அணிக்கு, இந்த வெற்றி ஆறுதல் தந்தது.

# සිංහල උගනිමු — சிங்களம் கற்போம் 08

இடைச்சொற்கள்
උපකාරක පද

ஒரு மொழியை பயன்படுத்தும்போது அம்மொழியின் இடைச் சொற்களை அறிந்திருத்தல் வேண்டும் சந்தர்ப்பத்திற்கேற்ப உரிய விடயங்களுக்கு ஏற்ப ஒரு விடயத்தை முழுமையாகவும் இலகுவாகவும் அர்த்தமுள்ளதாகவும் விளங்கிக் கொள்வதற்கு இடைச்சொற்களின் பயன்பாடு மிக முக்கியமானதாகும். எனவே இடைச்சொற்களைக் கற்போம்.

භාෂාවක් කතකරනකොට ලියනකොට උපකාරක පද භවිත කරන්න ඕන. නැති නම් තෙරුම් ගන්න බැහැ. ඒ නිසා මේ කලපයේ සිට උපකාරක පද හා ෂ්වා යෙදෙය හැටි හඳුනා ගනමු.

ஒருவருக்கு மேற்பட்டவர்களோடு ஒரு விடயத்தில் ஈடுபடும் போது உரிய பெயர்ச்சொற்களின் முடிவில் "යි" சேர்க்கப்பட்டு தொடர்பை ஏற்படுத்தி பயன்படுத்தப்படும்.

එක වැඩක් සිද්ධියක් කිහිප දෙනෙකු එකතු වෙලා කරනකොට ඒ නම්වල අගට "යි" යොදා භාවිත කරනවා

உதாரணம்
උදාහරණ

கமலாவும், ரம்பாவும், லீலாவும் கிணற்றிற்கு செல்கின்றார்கள்.
කමලයි රම්පයි ලීලයි ළිඳට යනවා

கபிலயும், ராஜாவும் திகலவும் ஊருக்குச் சென்றார்கள்.
කපිලයි රාජයි කිලකයි ගමට යනවා

மாமாவும் மாமியும் தொலைக்காட்சி பார்க்கின்றார்கள்
නැන්දයි මාමයි ටී.වී.බලනයා

குறிப்பு:
සටහන

பெயர்களின் இறுதியாக அமைகின்ற எழுத்து மெய் எழுத்தாக அமைகின்ற சந்தர்ப்பத்தில் அம் மெய் எழுத்துடன் (உ) "උ" சேர்க்கப்பட்டு பயன்படுத்தப்படும்

නම්වල අග අකුර හල් අකුරක් නම් ඒ අකුරට .උ. එකතුකර එවිට හැදෙන අකුර භාවිත කරනවා

உதாரணம்
උදාහරණ

கமலும், நிமலும் ராஜும் வேலைக்கு செல்கின்றார்கள்.
කම ලුයි නිමලුයි රාජුයි වැඩ කරනවා

කමල් + උ    කමලු + යි

(தொடரும்...)

**பி.வி.செல்வராஜ்**
விரிவுரையாளர் (ஓய்வுபெற்ற) தேசிய கல்வியியற் கல்லூரி
පී.වී.සෙල්වරාජ්
කථිකාචාර්ය (විශ්‍රාමික)

# அனைவருக்கும் ஆங்கிலம் 08

## ஆங்கில இணைப்புச்சொற்கள் என்றால் என்ன?

ஆங்கில இணைப்புச் சொற்கள் என்றால், ஆங்கில பேச்சின்கூறுகளில் உள்ளடங்கும் எட்டுக் கூறுகளில் ஒன்றாகும். இவை சொற்கள் (words), சொற்றொடர்கள் (Phrases) மற்றும் வாக்கியத்தின் உட்கூறுகள் (clauses) போன்றவற்றை இணைக்கப் பயன்படும் சிறிய சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் ஆகும். வாக்கியக் கூறுகளை இணைத்து நீண்ட ஒரு வாக்கியமாக அல்லது வாக்கியத் தொடராக பொருளை உணர்த்த இந்த இணைப்புச்சொற்கள் ஆங்கில இலக்கணப் பயன்பாட்டில் மிக முக்கியமானவைகளாகும்.

இணைப்புச்சொற்கள் பயன்படு முறைகள்
இணைப்புச்சொற்கள் எவ்வாறு எத்தனை முறைகளில் பயன்படுகின்றன?
இவை இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வாக்கியக் கூறுகளை இணைக்க தனித்த ஒற்றை சொல், கூட்டுச்சொற்கள், இடமாறி பயன்படும் சொற்கள் என மூன்று முறைகளில் பயன்படுகின்றன.


எடுத்துக்காட்டாக:

தனித்த ஒற்றைச்சொல்:
and
for
because
கூட்டுச்சொற்கள்
as long as
in order that
provided that
இடம் மாறி பயன்படும் சொற்கள்
so ... that
either ... or
not only ... but also
இணைப்புச்சொற்களின் வகைகள்
ஆங்கிலத்தில் எத்தனை வகையான இணைப்புச்சொற்கள் உள்ளன?

ஆங்கிலத்தில் நான்கு வகையான இணைப்புச்சொற்கள் உள்ளன. அவைகளாவன:
Coordinating Conjunctions
Subordinating Conjunctions
Correlative Conjunctions
Conjunctive Adverbs
குறிப்பு:
ஆங்கில இணைப்புச்சொற்களின் வகைகளை மூன்றாக மட்டுமே வகைப்படுத்துவோரும் உளர். இருப்பினும் "Conjunctive Adverbs" களும் வாக்கியக் கூறுகளை

அடுத்த மாதம் சந்திப்போம்–

# கிரிஎலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்



எலெக்ரோனிக் வகைகள்
சோபாசெற் தளபாட வகைகள்
அன்ரெனா டிஸ் அன்ரெனா
புதிய இணைப்புக்கள்
சகலவித றீசார்ஜ் இணைப்புக்களும்
மற்றும்
கடன் அட்டை மாஸ்ரர் காட்
போன்ற வசதிகளும் உண்டு

பொருட்கள் கடன் அடிப்படையிலும்
பெற்றுக் கொள்ளலாம்

மலிவு!
தரம்!
மனம் நிறைந்த சேவை!

Tel: 024 5671354, Fax:024 2226469
Mob:077 6143500
web: girielectronics.lk

ஆசிரியர்
"மாதநிலா"
172B, மில் வீதி, வவுனியா.

அனுப்பி வைக்கவேண்டிய முகவரி

குலுக்கள் நடைபெறும் இடமும் காலமும்
கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் – 286, கண்டி வீதி, வவுனியா
23.03.2014 மாலை 5.00 மணி

பெயர் :..............................
முகவரி :..............................
அ.அ.இல :..............................
தொ.பே.இல :..............................

வவுனியா நகரில் எலெக்ரோனிக் பொருட்களின் அரசன்

## கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்

கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் தமது வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக்கழிவுகளுடன் இலகுதவணை கொடுப்பனவுடனும் பொருட்களை வழங்குகின்றார்கள்

எலெக்ரோனிக் பொருட்கள் வாங்க வேண்டுமா? எங்கும் செல்லத்தேவையில்லை!

'வவுனியா கண்டி வீதியில் எலெக்ரோனிக் கடல்' கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட்

உடன் விரையுங்கள்

மாதந்தோறும் எமது சஞ்சிகையை பெற்றுக்கொள்ளும் மூன்று அதிஸ்டசாலிகளுக்கு
கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் பெருமையுடன் அள்ளி வழங்கும்

பரிசுக் குவியல்

20.04.2014ம் திகதிக்கு முன் கிடைக்கும் கூப்பன்களை சேகரித்து குலுக்கல் முறையில் தெரிவு செய்து மூன்று அதிஷ்டசாலிகளுக்கு சிறந்த பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்

எமது சஞ்சிகையுடன் செல்பவர்களுக்கு கிரி எலெக்ரோனிக் சுப்பர் மார்க்கட் பொருட்களுக்கு 20% விலைக்கழிவு வழங்குகின்றார்கள்

# 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்களுக்கான வினாத்தொகுப்பு

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம்-5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சையின் வினாத்தாள் 1 இற்கான மாதிரி வினாக்கள்

**ஆசிரியர்: என்.எஸ்.தீபன்** B.A, PG Dip in Edu, Dip in Teach
வ/பூந்தோட்டம் ம.வித்தியாலயம்



* **1ஆம் 2ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள படத்திற்கு மிகவும் பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்க.**


01. 


1. அழகு, முதுமை, கவர்தல்
2. இளமை, மழலைச்சொல், அழகு
3. துடிப்பு, அழகு, ஒய்வு

02. 


1. மழை, வெயில், சரணாலயம்,
2. மழை, பகல், பாதுகாப்பு
3. குடும்பம், இருப்பிடம், பாதுகாப்பு


* **3ஆம் 4ஆம் வினாக்களுக்கு அடுத்து வரும் உருவைத் தெரிவு செய்க.**

03. 


04. 


* **5ஆம் 6ஆம் வினாக்களில் வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**

05. 


06. 


* **7ஆம் 8ஆம் வினாக்களுக்கு பழமொழிகள் உணர்த்தும் கருத்தினைத் தெரிவு செய்க.**

07. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்
1. வீரனுக்கு புல் மட்டும் ஆயுதம்
2. வல்லவர்கள் புல்லைக்கொண்டு ஆயுதம் செய்வர்.
3. திறமையுள்ளவன் எதையும் வைத்து முன்னேறுவான்.

08. பணம் என்றால் பிணமும் வாய்திறக்கும்.
1. பணத்தாசை யாரையும் விட்டதில்லை
2. பணம் என்றால் பிணத்தை உயிர்ப்பிக்கலாம்.
3. பணத்தை கண்டதும் பிணம் அழும்.

* **9ஆம் 10ஆம் 11ஆம் வினாக்களுக்கு பின்வரும் குறியீட்டுக் கருத்துக்களை உபயோகித்து பொருத்தமான குறியீடுகளை இடுக.**

= சமன்  <- பெரிது  >- சிறிது

உதாரணம் 2 + 10 [ > ] 5 + 3

09. 45 + 32 [ ] 98 - 19
1. >  2. <  3. =

10. 35 + 71 [ ] 125 - 29
1. <  2. >  3. =

11. 79 + 42 [ ] 11 x 11
1. >  2. =  3.

* **12, 13, 14ஆம் வினாக்களுக்கு பின்வரும் குறியீட்டு செய்கையை அவதானித்து விடை தருக.**

○ x ○ = □

□ + □ = △

△ - △ = △ = 15 எனின்

12. ○ இன் பெறுமதி யாது?
1. 2  2. 3  3. 4

13. △ இவ் உருவுக்கு சமனான உருக்கூட்டம் எது?
1. □ ○  2. ○ ○  3. □ □ ○

14. பின்வரும் உருக்கூட்டங்களில் சம பெறுமதி அற்ற ஒரு உரு உள்ளது. அவ் உரு எது?
1. △ + ○  2. △ + ○  3. □ + □ + ○


15. இரவு : விண்மீன் எனின் பகல் : ..................
1. வெளிச்சம்  2. கதிரவன்  3. மதி


16. மரம் : பட்டை எனின் மீன் : ..................
1. முள்ளு  2. வால்  3. செதில்

17. கதிரவனின் தற்போதைய வயது 12 ஆண்டுகளாகும். இன்னும் 5 வருடங்களில் கதிரவனதும் அவனது தந்தையினதும் வயதுகளின் கூட்டுத்தொகையின் அரைவாசி 30 ஆண்டுகளாகும் எனின் தந்தையின் தற்போதைய வயது யாது?
1. 30  2. 35  3. 38

18. நிசாந்தினி தன் தாயாரைப் பார்த்து இன்னும் இரு வருடங்களில் வர இருக்கும் உங்கள் பொன்விழா பிறந்தநாள் ஆண்டில் நான் எனது வெள்ளிவிழா ஆண்டு பிறந்தநாள் கொண்டாடுவேன் எனக் கூறினாள் எனின் தற்போது தாயினதும் மகளினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
1. 73  2. 71  3. 75

* **பின்வரும் உருக்களில் சம சுற்றளவு இல்லாத உருவைத் தெரிவு செய்க.**

19.



20.


# கணினி மயம் 5

-தேடுதலுக்கான விடை

## கணினி பாவனையாளர்களுக்கான 5 முக்கிய விடயங்கள்

பொது இடங்களில் உள்ள கணனிகளை பாவிக்கும் போது உங்கள் தகவல்களின் பாதுகாப்பிற்காக நீங்கள் கவனிக்க வேண்டிய 5 அடிப்படை விடையங்கள் தொடர்பாக இந்த கட்டுரை ஆராய்கின்றது. அதில் முதலாவது நீங்கள் சில இணையங்களை பயன்படுத்துவதற்கோ அல்லது உங்கள் மின்னஞ்சலை பார்வையிடுவதற்கோ உறுப்பினர் பெயர் கடவுச்சொற்களை பாவித்திருப்பீர்கள் அவ்வாறு பாவித்திருந்தால்... அந்த இணையப்பக்கத்தில் "log out" என்ற கட்டளை இருக்கும் அதில் அழுத்தி அப்பக்கத்தின் பாவனையினை நீங்கள் தற்போது பூர்த்தி செய்து கொள்ளலாம்.

அத்துடன் நீங்கள் உள் நுழைவதற்கு பயன்படுத்திய உறுப்பினர் பெயருக்கான தடங்களை அழிப்பதற்கு ஏதாவது ஒரு பெயரை அந்த இடத்தில் கொடுத்து ஒரு முறை முயற்சி செய்துவிடுங்கள்(இது உங்கள் தடத்தினை அழிப்பதற்காக மட்டுமே இதனால் வேறு எந்த செயற்பாடுகளும் நடைபெறமாட்டாது. உங்களால் பிழையான ஒரு பெயருடன் அந்த இணைய பக்கத்திற்குள் நுழையவும்

முடியாது) சில இணையப்பக்கங்கள் மற்றும் தொடர்பாடல் மென்பொருட்கள் automatic login என்ற ஒரு தெரிவுக்கான பகுதியை நீங்கள் அங்கு உறுப்பினராக உள்நுழையும் போது காட்டி நிற்கும்.


பொது இடங்களில் கானனிகளை பாவிக்கின்ற போது நீங்கள் இந்த தெரிவை தெரிவு செய்வீர்களேயானால் உங்கள் உறுப்பினர் பெயர் மற்றும் கடவுச்சொல் என்பது அந்த கணனியில் பதியப்பட்டுவிடும். இது மறுமுறை இந்த பக்கத்தினை திறக்கும் போது உங்களிடம் உறுப்பினர் பெயர் கடவுச் சொல்லினை கேட்டு சிரமப்படுத்தாமல் இருப்பதற்கான ஒரு வசதியாகும். ஆனால் பொதுவான கணனிகளில் நீங்கள் இதனை பயன்படுத்துவது உங்கள் பெயரில் மற்றவர்களும் ஒரு இணைய பக்கத்தை வலம்வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்துவிடும்.

இரண்டாவது ஒரு பொதுவான கணனியில் நீங்கள் பாவனையினை முடித்துவிட்டு செல்லும்போது அந்த கணனியில் உங்கள் முக்கியமான தகவல்களை விட்டுவிட்டு செல்லாதீர்கள் குறிப்பாக உங்களை பற்றிய விபரங்களையோ அல்லது உங்கள் நிறுவனம் வேளை தொடர்பாக நீங்கள் இணையத்தின் மூலம் தரவிறக்கம் செய்து கொண்ட விடையங்களையோ நீங்கள் இப்படியான கணனி திரைகளில் விட்டுவிட்டு சென்றால் அது மற்றவர்களின் தவறான பயன்பாட்டிற்கு உட்படலாம். மூன்றாவது ஒரு பொதுவான கணனியில் நீங்கள் இணையத்தினை பயன்படுத்தியிருக்க முடியும் அந்த கணனியில் பார்த்த இணையப்பக்கங்களையோ அவற்றின் முகவரிகளையோ முடியுமானவரை History பகுதிக்கு சென்று அழித்துவிடுங்கள்.

அவற்றோடு Delete Files> Delete Cookies என்பனவற்றினையும் செய்வீர்களேயானால் அது மேலும் சிறந்தது. முக்கியமாக சில இணைய உலாவிகள் Internet browsers) தன்னியங்கி முறையில் கடவுச்சொல்களை சேமிப்பதற்கான கட்டளைகள் கொடுக்கப்பட்டிருக்கும். என்பதனால் அவ்வகையான உலவிகளில் இணையத்தில் உலாவரும்போது உங்கள் இணைய உலாவி தற்போது தன்னியங்கி முறையில் கடவுச்சொல் உறுப்பினர் பெயர் என்பனவற்றினை சேமிக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

பொது...ாக தன்னியங்கி முறையில் சேமிப்பதற்கும் ஒரு வேண்டுகோள் உங்களிடம் கேட்கப்படும். அதைக் கொண்டே நீங்கள் இந்த விடையத்தில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். நான்காவது விடையம் மிகவும் முக்கியமானதும் வழமையாக நடைபெறுவதுமாகும் அதாவது ஒரு பொது கணனியினை நீங்கள் பயன்படுத்துகின்ற போது உங்கள் அயலில் இருப்பவர் தொடர்பில் அவதானமாக இருங்கள். அவர் உங்களுடைய முக்கியமான விடையங்களை கவனித்துக்கொண்டிருக்கலாம் அல்லது உங்கள் விபரங்களை குறித்துக்கொண்டு இருக்கலாம் இவ்வாறும் உங்கள் இணைய இரகசியங்கள் திருட்டுப்போகலாம்.

ஐந்தாவது பொது இடங்களில் உள்ள கணனிகளில் உங்களுடைய மிகவும் பெறுமதிவாய்ந்த விடையங்களை பயன்படுத்தாதீர்கள். அதாவது இணையத்தில் கணக்கு அட்டை பாவனை மற்றும் இணைய கட்டணங்களை செலுத்துதல் வங்கி கணக்குகளை பார்வையிடுதல் என எந்தவித செயற்பாடுகளையும் செய்யாதீர்கள். ஏனெனில் அக்கணனிகளில் உங்கள் தரவுகளை மற்றும் உங்கள் செயற்பாடுகளை சேமித்துக்கொண்டு இருக்கக்கூடிய மென்பொருட்களோ அல்லது உங்கள் கணனி திரையினை தொலைவில் இருந்து கண்காணிக்கக்கூடிய மென் பொருட்களோ நிறுவப்பட்டிருக்கலாம். அவை நீங்கள் பொது இடங்களில் உள்ள கணனிகளை பயன்படுத்தும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய ஐந்து அடிப்படைகள். அவை Microsoft தனது பாவனையாளர்களுக்கு வழங்கியுள்ள அறிவுரைகளில் இருந்து பெறப்பட்டவை.


Skype
Selection
மங்கையரின்
மனம் நிறை டிசைன்களும்
ஆடவர்கள், சிறுவர்கள்
அனைவருக்கும் அதிசிறந்த
தெரிவுகளின் சிம்மாசனம்
132, Mill Road Juncation,
Bazaar Road, Vavuniya.
077 2165662


Leading
Sole Proprietor
R.Rajendran
Crusher Works
Building Bridge & Road Contractor
Matal Supplier & Transporters
Hiring for exavator, Dozer, Motorgrader,
Road Roller, JCB, Tipper & Loader
Tel: & Fax: 024 2222990, 024 4927110
Email: leadingcrusher@yahoo.com #118,Poonthoddam Road, Vavuniya.




Printed by Vijay Printing Centre, and Published by Print Land Publication, No:172B, Mill Road, Vavuniya. in April, 2014